Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
5215 Finch Ave. E., Suite:203 Toronto, Ontario, Canada, M1S 0C2
Office: 416.321.6969 Fax: 416.321.6963
www.divhomes.com

34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 34 பாலம்: 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2024

# இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் – 2024

இலங்கையின் புதிய அதிபராக அனுர குமார திஸாநாயக்க 2024 செப்ரெம்பர் 23ஆம் திகதி பதவியேற்ற பின்னர் செப்ரெம்பர் 24ஆம் திகதி நள்ளிரவுடன் இலங்கையின் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். இலங்கையின் 17ஆவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நொவெம்பர் 14ஆம் திகதி நடைபெறும். இத்தேர்தலுக்கான வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதி ஒக்ரோபர் 4ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 11ஆம் திகதி வரையாகும். புதிய நாடாளுமன்றம் 2024 நொவெம்பர் 21ஆம் திகதி பதவியேற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 83 இருக்கின்றன. நாடு முழுவதுமுள்ள தேர்தல் மாவட்டங்களில் 407 கட்சிகளும் 282 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தமாக 689 குழுக்கள் போட்டியிடுகின்றன. இவற்றில் எல்லாக் கட்சிகளைச் சேர்த்த 5,006 வேட்பாளர்களும் எல்லா சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 3,346 வேட்பாளருமாக மொத்தமாக 8,352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதைவிட தேசியப் பட்டியலில் 469 வேட்பாளர்கள் உள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களில் 196 பேர் நாடு முழுவதிலுமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மிகுதி 29 பேரும் நாடு முழுவதும் கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஜனநாயகத் தேர்தல் முறையில் சிறப்பானது எனக் கருதப்படும் விகிதாசாரத் தேர்தல் முறை தெற்காசிய நாடுகளில் இலங்கையில் மட்டுமே நடைபெறுகிறது. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளில் தொகுதி ரீதியில் அதிக வாக்குகள் வாங்கியவரே வெற்றி பெற்றவராகக் கருதப்படுகிறார். இது கனடாவில் உள்ள FPTP தேர்தல்முறை போன்றது. நேபாளத்திலும் பெரும்பாலானோர் தொகுதிவாரியாகவும் சில உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். பாகிஸ்தானிலும், வங்கதேசத்திலும் சில உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையில் 1978ஆம் ஆண்டில் புதிய அரசியல்சாசனம் அமலாக்கப்பட்ட பின்னர் விகிதாசாரத் தேர்தல் (PR system) முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. விகிதாசாரத் தேர்தல் முறைமூலம் இலங்கையில் முதன்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் 1989ஆம் ஆண்டில் ஆகும். இப்புதிய விகிதாசாரத் தேர்தல் முறை அமைக்கப்பட முன்னர் இலங்கையில் 160 தொகுதிகள் இருந்தன. இவ்விகிதாசாரத் தேர்தல் முறையில் 160 தொகுதிகளும் 22 தேர்தல் மாவட்டங்களுள் அடங்குகின்றன.



அதைவிட ஒவ்வொரு மாகாணத்திற்கும் 4 உறுப்பினர்கள் வீதம் 36 உறுப்பினர்களையும் இந்த 22 தேர்தல் மாவட்டங்களுக்குள் சேர்த்தனர். இதனால் தற்போது இந்த 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அத்துடன் நாடு முழுவதும் 29 உறுப்பினர்கள் மேலதிகமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையின் அரசியல் சட்டப்படி 22 மாவட்டங்களிலும் உள்ள 160 உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றப்படமாட்டாது. ஆனால் மாவட்டங்களின் சனத்தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்ட 4 உறுப்பினர்களும் மாற்றப்படலாம். எவ்வாறாயினும் நாடு முழுவதிலுமுள்ள தேர்தல் மாவட்டங்களில் இருந்து விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்படும் 196 உறுப்பினர்களின் எண்ணிக்கையோ அல்லது மொத்த உறுப்பினர்களான 225 பேரின் எண்ணிக்கையோ மாறாது. உதாரணமாக 1989இல் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சனத்தொகையில் ஏற்பட்ட இறக்கத்தால் 1994இல் 10 உறுப்பினர்களாக இது குறைந்தது. மீண்டும் 2000ஆம் ஆண்டில் 9 உறுப்பினராகி, 2015இல் 7 உறுப்பினராகி தற்போது 2024இல் இருந்து 6 உறுப்பினராக இது உள்ளது.

நுவரெலிய தேர்தல் மாவட்டத்தில் 1989இல் 6 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 2015இல் இருந்து 2 உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட்டு 8 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையின் அரசியல் நிர்வாகத்திற்காக நாடு 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல தமிழ் மாவட்டங்களில் சனத்தொகை குறைவாக இருப்பதால் தேர்தலுக்காக நாடு 22 மாவட்டங்களாகக் கருதப்படுகிறது. வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மூன்று அரசியல் நிர்வாக மாவட்டங்களைச் சேர்த்து ஒரு வன்னித் தேர்தல் மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி அரசியல் நிர்வாக மாவட்டங்கள் இரண்டையும் சேர்த்து ஒரு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து தற்போது தெரிவு செய்யப்படுவோரின் எண்ணிக்கையை அட்டவணை 1இல் காணலாம்.

அட்டவணை 1

| தேர்தல் மாவட்டத்தின் இலக்கம் மற்றும் பெயர் | தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. கொழும்பு | 18 | 21 |
| 02. கம்பஹா | 19 | 22 |
| 03. களுத்துறை | 11 | 14 |
| 04. கண்டி | 12 | 15 |
| 05. மாத்தளை | 05 | 08 |
| 06. நுவரெலியா | 08 | 11 |
| 07. காலி | 09 | 12 |
| 08. மாத்தறை | 07 | 10 |
| 09. அம்பாந்தோட்டை | 07 | 10 |
| 10. யாழ்ப்பாணம் | 06 | 09 |
| 11. வன்னி | 06 | 09 |
| 12. மட்டக்களப்பு | 05 | 08 |
| 13. திகாமடுல்ல | 07 | 10 |
| 14. திருகோணமலை | 04 | 07 |
| 15. குருநாகல் | 15 | 18 |
| 16. புத்தளம் | 08 | 11 |
| 17. அநுராதபுரம் | 09 | 12 |
| 18. பொலன்னறுவை | 05 | 08 |
| 19. பதுளை | 09 | 12 |
| 20. மொனராகலை | 06 | 09 |
| 21. இரத்தினபுரி | 11 | 14 |
| 22. கேகாலை | 09 | 12 |

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கு இடங்கள் வழங்கப்படும். தேர்தல் நாள் அன்று வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளினதும்/சுயேச்சைக் குழுக்களினதும் பெயரும் அவர்களது சின்னமும் இருக்கும். அதற்கு நேரே வாக்காளர் புள்ளடி போடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

NACPT PHARMA COLLEGE
O/A North American College of Pharmaceutical Technology
CANADIAN STUDENT VISA PILOT PROGRAM
Visitor Visa மூலம் வந்துள்ள இலங்கை மாணவர்களுக்கு
DLI Institution
All Programs are available ONLINE / ONCAMPUS / VIA HYBRID
MORE INQUIRY: WhatsApp
647 998 7374
info@nacptpharmacollege.com
www.nacptpharmacollege.com
WEBSITE
Campus Locations Toronto: 9 - 5310 Finch Ave East, Toronto, ON M1S 5E8
Brampton: 44 Queen St E, Brampton, ON L6V 1A2

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate Insurance

HOMELIFE
HOME LIFE / GTA REALTY INC BROKERAGE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
*Independently Owned & Operated
TRUTH BUILDS TRUST

# NEW INDUSTRIAL / OFFICE BUILDING

## Mostly Anticipated New Project in Scarborough

on

## 2711 Markham Road

## @ Nashdene

Only Limited Units

For further Info :

**Please Call : 416 321 6969**

Raja Mahendran
Broker / Owner
raja@mahendran.ca

Gulshan Sharma
Broker
gksharmaca@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# இழக்கப்படும் தமிழ்ப் பிரதிநிதித்துவம்

## – அரவின் –

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாகப் பிளவு பட்டிருந்த தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற தேர்தலில் நான்கு தரப்புகளாகப் பிரிந்திருக்கின்றன.

இம்முறை தமிழரசுக் கட்சி தனியாகப் போட்டியிடுகிறது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறது. தமிழ் மக்கள் கூட்டணி தனியாகப் போட்டியிடுகிறது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி வழக்கம்போல தனியாகவே வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறது.

ஆக மொத்தத்தில் வடக்குக் கிழக்கில் தமிழ் வாக்குகள் 4 பிரிவுகளாகப் பிளவு படுத்தப்படுகிறது. இதன் காரணமாக, இம்முறை தமிழ் பிரதிநிதித்துவம் என்பது முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை குறைந்ததால், ஏழாக இருந்த நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைக்கப்பட்டு விட்டது.

இதனால் தமிழருக்கான ஆசனப் பிரதி நிதித்துவம் ஒன்று பறிக்கப்பட்டு விட்டது. இருக்கின்ற 6 ஆசனங்கள் எப்படிப் பகிரப்படப் போகின்றன?

தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் உள்ள பிளவுகள், அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி, வெறுப்பு, போன்றவற்றால், மாற்றுக் கட்சிகளின்மீது மக்கள் நாட்டம் கொள்ளும் ஆபத்து தோன்றியிருக்கிறது.

அனுர குமார திஸாநாயக்க ஆட்சியைப் பிடித்த பின்னர், தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றும் இலக்குடன், மருத்துவர் சிறிபவானந்தராஜா தலைமையில் வேட்பாளர்களைக் களமிறக்கியிருக்கிறது.

2020 நாடாளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்டு 16 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற சந்திரகுமார், 14 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுகிறார்.



ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும், இம்முறை தமிழ்த் தேசிய கட்சிகளுக்கான முக்கியமான அச்சுறுத்த லாக இருக்கும்.

அதேபோல, ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் போன்றோராலும், தமிழ்த் தேசிய அரசிய லுக்குக் கணிசமான நெருக்கடி இருக்கிறது.

இதனைத் தாண்டி, தமிழ்த் தேசியக் கட்சி களின் நான்கு அணிகள் எவ்வாறு ஆசனங்களைப் பகிர்ந்து கொள்ளப் போகின்றன?

இம்முறை அதி உச்ச குழப்பங்கள் இடம் பெற்றுள்ளது தமிழரசுக் கட்சியில்தான்.

இந்தக் கட்சியில் ஜனாதிபதித் தேர்தலின் போது, தொடங்கிய குழப்பம் இப்போது உச்சக் கட்டத்தை அடைந்து, பல முக்கிய தலைவர்கள் அந்தக் கட்சியைவிட்டு வெளி யேறும் நிலையை உருவாகியிருக்கிறது.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பொறுப்புகளைத் துறந்திருக்கிறார்.

சட்டத்தரணி தவராஜா, கட்சியின் அனைத்துப் பதவிகளிலுமிருந்து விலகி, அதிருப்தி அணிக்குத் தலைமை தாங்கி சுயேட்சைக் குழுவாக யாழ்ப்பாணத்தில் களமிறங்கியிருக்கிறார். அதில் சரவண பவன், உள்ளிட்ட பலர் இணைந்திருக் கின்றனர்.

சசிகலா ரவிராஜ், கட்சியைவிட்டு வெளி யேறி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி யில் போட்டியிடுகிறார்.

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய மிதிலைச்செல்வி, சட்டத்தரணி உமாகரன் ராசையா போன்றோர் தமிழ் மக்கள் கூட்டணியில் போட்டியிடுகின்றனர்.

வன்னி மாவட்டத்தில் போட்டியிடவிருந்த சட்டத்தரணி தனஞ்சயன் போட்டியில் இருந்து விலகி இருக்கிறார்.

மட்டக்களப்பில் முன்னாள் அரசாங்க அதிபர் உதயகுமார் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் போட்டியிடுகிறார்.

இப்படி அந்தக் கட்சிக்குள் ஒரு பிரளயம் நடந்து கொண்டிருக்கிறது.

இதற்குப் பிரதான காரணம், யாழ்ப் பாணத்தில் சுமந்திரனும் மட்டக்களப்பில் சாணக்கியனும் தங்களின் நாடாளுமன்ற பதவிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற் காகத் தீட்டிய சதித் திட்டங்கள்தான்.

இந்த முறை கட்சியின் பெயர் கெட்டுப் போய் இருப்பதால், வாக்குகள் கிடைப்பது கணிசமாகக் குறையும்.

அதனால் கட்சியின் முக்கிய பிரமுகர் களை வெளியேற்றி அல்லது போட்டியிட முடியாமல் செய்து, கிடைக்கின்ற வாக்கு களைக்கொண்டு, தாங்கள் இரண்டு பேரும் நாடாளுமன்றத்திற்குச் சென்றால் போதும் என்ற அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த இரண்டு பேரினதும் திட்டத்திற்கு தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும் தலையாட்டும் பொம்மைகளாக மாறியதன் விளைவாக, இன்று அந்தக் கட்சி தனது முக்கால் நூற்றாண்டு பாரம்பரியத்தைப் பறிகொடுத்து, மக்கள் முன் அவமானப்பட்டு நிற்கின்றது.

யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்பட்டியலில் இருந்து சிறிதரனை நீக்குவதற்கு மேற் கொண்ட முயற்சி தோல்வியடைந்த நிலையில், அவரைத் தனிமைப்படுத்தித் தோற்கடிக்கும் திட்டத்தை சுமந்திரன் தரப்பு முன்னெடுத்து வருகிறது.

அதற்காக, வேட்பாளர் பட்டியலில் சுமந்திரனுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், சாணக்கி யனை மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்காக, யோகேஸ்வரன், உதய குமார் போன்றோர் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற முடியாமல் தடுக்கப்பட்டனர். முன்னர் தடுக்கப்பட்ட சிறிநேசன், குழப்பங் கள் மோசமானதால், உள்வாங்கப்பட்டார்.

இந்தத் திட்டத்தினால் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு தமிழரசுக் கட்சி கடுமை யான விமர்சனங்களை சந்திக்கிறது.

இத்தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிட்டால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகபட்ச ஆசனங்களை வெல்லக்கூடிய சாத்தியம் இருந்தது.

ஆனால், சுமந்திரன் வெற்றிபெற முடியாத நிலை ஏற்படும் என்பதால், தமிழரசுக் கட்சியை அவர் தனி வழிக்குக் கொண்டு சென்று விட்டார்.

அதேவேளை, சங்கு சின்னத்தை கைப்பற்றிக்கொண்ட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும், பெரும்பாலும் பழைய முகங்களுடனேயே வேட்புமனுவை தாக்கல் செய்திருக்கிறது.

சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் போன்ற முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களும் கஜதீபன், வேந்தன் போன்றோரும் இப்பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றனர்.

தமிழரசுக் கட்சியில் வாய்ப்பு மறுக்கப்பட்ட சசிகலா ரவிராஜுக்கும் கடைசி நேரத்தில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இக்கூட்டணி இத்தேர்தலை நம்பிக்கை யான முறையில் எதிர்கொண்டாலும் சங்கு சின்னத்தை அபகரித்துக்கொண்ட இந்தக் கூட்டணியை மக்கள் ஏற்றுக் கொள்வார் களா என்பது தேர்தலின் போதுதான் தெரியவரும்.

தமிழ் மக்கள் கூட்டணியிலும் பிரச்சினை களுக்குக் குறைவில்லை. இளையோருக்கு வழிவிடுவதாக சீ.வி.விக்னேஸ்வரன் போட்டியிடாமல் ஒதுங்கி விட்டார். அருந்தவபாலனை முதன்மை வேட்பாள ராக நிறுத்துவதாகக் கூறியிருந்தார்.

ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யிலிருந்து பிரிந்த மணிவண்ணன் தரப்பினர், அதற்கு இணங்கவில்லை. இதனால், மணிவண்ணனை தலைமை வேட்பாளராகக்கொண்டு தமிழ் மக்கள் கூட்டணி வேட்புமனுவைத் தாக்கல் செய்திருக்கிறது. அதில் பெரும்பாலும் இளைஞர்களும் அறிமுக வேட்பாளர் களாகவும்தான் இருக்கின்றனர்.

ஆனால் அவர்களால் வாக்குகளைத் திரட்டக்கூடிய நிலை இருக்குமா என்பது சந்தேகம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த முறையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிடுகிறது. கஜேந்திரன் உள்ளிட்ட வழக்கமான வேட்பாளர்கள் அதில் இடம்பெற்றிருக் கின்றனர்.

இப்படி நான்கு தரப்புகளாகத் தமிழ் வாக்குகள் சிதறிப் போகின்ற சூழலை யாழ்ப்பாணம் உள்ளிட்ட எல்லா மாவட்டங் களிலும் பயன்படுத்திக் கொள்வதற்குப் பிற கட்சிகள் முனைப்புக் காட்டி வருகின்றன.

கடந்த முறை அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுவிட்ட நிலையில் இம்முறை அதனைத் தக்க வைப்பதற்கு சிவில் சமூகத்தினர் முயற்சிகளை மேற்கொண்டனர்.

அதேபோன்று, திருகோணமலை மாவட்டத் தில் ஒரு பிரதிநிதித்துவத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக திருகோணமலை ஆயர் தலைமையில் ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இலங்கையின்.....


01ஆம் பக்கத்தொடர்ச்சி

அத்துடன் அந்த வாக்குச்சீட்டில் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் 1 தொடக்கம் 22வரை காணப்படும். இந்த இலக்கங்களின் எண்ணிக்கை அந்தத் தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப் படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடும்.

மாதிரி வாக்குச்சீட்டை பார்க்கவும்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகளும்/சுயேச்சைக் குழுக்களும் அந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட மூன்று உறுப்பினர் களின் பெயர்களைக் கூடுதலாக வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும்.

## வாக்களிப்பது எப்படி




**சரி**

மேலே விருப்பமான ஒரு அரசியல் கட்சிக்கு முன்னால் அல்லது ஒரு சுயேச்சை குழுவிற்கு முன்னால் X அடையாளம் இடவும்

கீழே விருப்பமான மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு முன்னால் X அடையாளம் இடவும்

**தவறு**

ஒன்றுக்கு மேலதிகமாக அரசியல் கட்சிகளுக்கோ அல்லது சுயேச்சை குழுக்களுக்கோ முன்னால் X அடையாளம் இட வேண்டாம்

அரசியல் கட்சி அல்லது சுயேச்சை குழுவிற்கு முன்னால் சின்னங்களையோ அல்லது இலக்கங்களையோ அடையாளம் இட வேண்டாம்

மூன்றை விட அதிகமான வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு X அடையாளம் இட வேண்டாம்

இலங்கையின் தேர்தல் மாவட்டங்களில் மிகக்குறைவான 4 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் மாவட்டமாக திருகோண மலை உள்ளது. அதேபோல் அதிகூடிய 19 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் மாவட்டமாகக் கம்பஹா உள்ளது. இதனால் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளும்/ சுயேச்சைக் குழுக்களும் 7 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும், கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளும்/ சுயேச்சைக் குழுக்களும் 22 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

வாக்களிக்கும் முறை: முதலாவதாக வாக்காளர்கள் தாங்கள் விரும்பும் கட்சி யின் சின்னத்துக்கு அருகிலுள்ள பெட்டி யில் புள்ளடியிட்டு தமது வாக்கைப் பதிவு செய்வர். பின்னர் அதே வாக்குச்சீட்டின் கீழ்ப்பகுதியில் தாம் ஆதரிக்கும் கட்சியின் /சுயேச்சை குழுவின் சார்பில் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் தாம் விரும்பும் மூவரின் இலக்கங்கள்மீது புள்ளடி இடுவர். ஒரு வாக்காளர் தாம் விரும்பும் வேட்பாளர் களின் இலக்கத்தில் புள்ளடி ஒன்றும் இடாவிட்டாலும் பரவாயில்லை, அல்லது ஒருவரின், இருவரின் அல்லது மூவரின் இலக்கத்திலும் புள்ளடியிட்டாலும் இவ் வாக்கு செல்லுபடியாகும்.

செல்லுபடியற்ற வாக்குகள்: ஒரு வாக்காளர் வாக்குச்சீட்டில் தான் விரும்பும் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி இடவேண்டும். இவ்வாறு புள்ளடி போடா விட்டாலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சி/ சுயேச்சைக் குழுக்களுக்கு புள்ளியிட்டி ருந்தாலோ அந்த வாக்குச்சீட்டு செல்லு படியற்றதாகிவிடும். ஒரு வாக்காளர் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி போடாமல் வாக்குச்சீட்டின் கீழே உள்ள தாம் விரும்பும் வேட்பாளர்களில் மூவருக்கு மட்டும் புள்ளடியிட்டிருந்தால் அந்த வாக்குச்சீட்டு செல்லுபடியாகாது.

ஒரு வாக்காளர் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி போட்ட பின்னர் வாக்குச்சீட்டின் கீழே உள்ள தாம் விரும்பும் வேட்பாளர களில் நால்வருக்குப் புள்ளடியிட்டிருந்தால் அவரது விருப்பு வாக்குச் செல்லாது என அறிவிக்கப்படும். ஆனால் அவர் அளித்த கட்சி/சுயேச்சைக் குழுவின் வாக்கு கணக்கில் எடுக்கப்படும். அதாவது அவர் விருப்பு வாக்கில் ஒருவருக்கும் புள்ளடி யிடவில்லை எனக் கருதப்படும். இதனால் அவரின் வாக்கு கட்சிக்கு மட்டுமே போட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

வாக்குகள் எண்ணப்படும் முறை: தேர்தல் முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் முதலில் கட்சிகள்/ சுயேட்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்படும். ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் கூடுதலாக வாக்குகளைப் பெற்ற கட்சி/சுயேச்சைக்குழுவிற்கு அந்தத் தேர்தல் மாவட்டத்திற்குரிய முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு வழங்கப்படும். பின்னர் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் பதிவான வாக்குகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள்/சுயேட்சைக் குழுக்கள் போட்டியிலிருந்து விலக்கப்படும். இதன் பின்னர் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் விழுந்த செல்லுபடியான வாக்குகளின் கூட்டுத் தொகையில் இருந்து 5 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள்/சுயேட்சைக் குழுக்களின் வாக்குகள் கழிக்கப்பட்டு மீதமுள்ள வாக்குகளே நாடாளுமன்ற உறுப்பினர் களைத் தேர்தெடுக்கச் செல்லுபடியான மொத்த வாக்குகளாகக் கணக்கில் எடுக்கப்படும்.

இந்த மொத்த வாக்குகள் எண்ணிக் கையை அந்தந்தத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர் களின் எண்ணிக்கையில் ஒன்று குறைக்கப் பட்டு மீதமுள்ள எண்ணிக்கையால் பிரிப்பதன்மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இந்த ஒரு நாடாளு மன்ற உறுப்பினரை தெரிவு செய்யத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கை யால் ஒவ்வொரு கட்சி/சுயேட்சைக் குழு பெற்ற வாக்குகள் பிரிக்கப்பட்டு அந்தக் கட்சி/சுயேட்சைக் குழுவிற்கு உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு கட்சிக்கும் உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட பின்னர் இன்னமும் அந்தத் தேர்தல் மாவட்டத்தி லிருந்து தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை மீதமாக இருந்தால், மேற்கூறியவாறு உறுப்பினர் களின் எண்ணிக்கை கணிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள வாக்குகளில் ஆகக் கூடியவற்றைக் கொண்ட கட்சி/சுயேட் சைக் குழுவிற்கு அது வழங்கப்படும்.

இறுதியாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத் திலும் எந்தெந்தக் கட்சி/சுயேட்சைக் குழுவிற்கு எவ்வளவு இடங்கள் எனக் கணிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்சிகள் சார்பில் விழுந்த விருப்பு வாக்குகள் எண்ணப்படும். கட்சி/சுயேட்சைக்குழுவிற்கு எவ்வளவு இடங்கள் கிடைத்துள்ளனவோ அதற்கு ஏற்ற ஒழுங்கில் கூடுதலான விருப்பு வாக்குப்பெற்றவர்கள் நாடாளு மன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு 196 நாடாளு மன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

தேசிய வேட்பாளர் தெரிவு: இதுவரை 196 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள் /சுயேச்சைக் குழுக்கள் பெறும் வாக்குகளின் விகிதாசாரப்படி தெரிவு செய்யப்பட்டனர் என்று பார்த்தோம். இப்போது மிகுதி 29 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர் என்று பார்ப்போம்.

நாடு முழுவதும் மொத்தமாக அதாவது 22 தேர்தல் மாவட்டங்களையும் சேர்த்து ஒவ்வொரு கட்சியும்/சுயேச்சைக் குழுக் களும் எவ்வளவு வாக்குகள் பெற்றனர் என்று கணிக்கப்படும்.

உதாரணமாக நாடு முழுவதும் உள்ள 17 மில்லியன் வாக்காளர்களில் செல்லுபடி யான வாக்குகள் எண்ணிக்கை 14,500,000 என எடுத்துக்கொள்வோம். நாடு முழுவதும் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகள் அட்டவணை 2இல் உள்ளவாறு எடுத்துக் கொள்வோம்.

அட்டவணை - 2

| கட்சி/ சுயேச்சைக் குழு | பெற்ற வாக்குகள் | வழங்கப்பட்ட உறுப்பினர்கள் |
|---|---|---|
| கட்சி A | 5,000,000 | 10 |
| கட்சி B | 3,800,000 | 7+1 |
| கட்சி C | 3,350,000 | 6+1 |
| கட்சி D | 2,000,000 | 4 |
| கட்சி E | 250,000 | 0 |
| சுயேச்சைக்குழு F | 100,000 | 0 |
| | 14,500,000 | 29 |

நாடு முழுவதும் விழுந்த செல்லுபடியான 14,500,000 வாக்குகளை 29 உறுப்பினர் களின் எண்ணிக்கையையால் பிரிக்க, ஓர் உறுப்பினர் தெரிவு 500,000 வாக்குகள் தேவை எனக் கணிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்சியும்/சுயேச்சைக் குழுக் களும் பெற்ற மொத்த வாக்குகளை 500,000ஆல் பிரிக்க வரும் முழு எண் அளவு உறுப்பினர்களது எண்ணிக்கை கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

கட்சிகள் சுயேச்சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்படாமல் 29 உறுப்பினர்களில் மீதி உறுப்பினர்கள் இருந்தால் அது மேற்கூறிய உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள வாக்கு களில் அதிகம் உள்ள கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு கட்சியும் தேசியப்பட்டியல் தெரிவு செய்ய என ஆகக்கூடியது 29 பேர்களைக் கொண்ட நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தமக்குக் கிடைத்த தேசிய

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# மாற்ற அலையில் காணாமல்போகும் அரசியல்வாதிகள்

– முகிலன் –

தாங்கள் வெற்றி பெற்றால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து தேர்தலை நடத்துவோம் என்று கூறிய கட்சிகள், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது திகைத்துப்போய் விட்டன.

ஜனாதிபதித் தேர்தல் களைப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்னர் அடுத்த தேர்தலா என்ற சலிப்பு மாத்திரம் அதற்குக் காரணம் அல்ல. அரசியல் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றமும் இதற்கு ஒரு காரணம்.

கட்சிகள் அடுத்தடுத்து தேர்தலுக்குத் தயாராவதென்றால் சாதாரணமான விடயம் அல்ல.

வேட்பாளர்களைத் தயார்படுத்த வேண்டும், கூட்டணிகளை ஒழுங்கமைக்க வேண்டும், பிரச்சாரத்துக்குப் பணத்தைத் திரட்ட வேண்டும். இப்படி ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகங்கள் வேறு, கூட்டணிகள் வேறு. அந்தக் கூட்டணி பொதுத்தேர்தலில் நீடிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

சில கட்சிகள் அந்தக் கூட்டணியைத் தொடருகின்றன. பல கட்சிகள் அதில் இருந்து விலகி, சொந்தமான அரசியல் பாதையில் பயணிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளருக்கு ஆதரவு வழங்கலாமா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

பொதுத்தேர்தலில் நிலைமை அவ்வாறு இல்லை. கூட்டணி அமைக்கும்போது, ஆசன ஒதுக்கீடுதான் பிரச்சினைக்குரிய விடயமாக எப்போதும் இருக்கும்.

அதேபோன்று யாரை வேட்பாளராக நிறுத்துவதென்பது இன்னொரு பிரச்சினை.

அதிகளவு வேட்பாளர்கள் இருக்கின்ற போது, அவர்களைச் சமாளித்து ஒற்றுமையாக்கி, தேர்தல் முடியும் வரையாவது பிரச்சினைகள் இல்லாமல் பாதுகாத்துக் கொள்வது ஒரு தனியான சிக்கல்.

வேட்பாளர்கள் கிடைக்காதபோது, அவர்களைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து சேர்ப்பது இன்னொரு பிரச்சினை.

கூட்டணிகளை அமைத்து வேட்பாளர் பட்டியலையும் தயாரித்துவிட்டால், அடுத்த கட்டமாக பிரச்சாரம் செய்வது என்பது கடுமையான சிக்கல்.

ஏனென்றால், இப்போதுதான் ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்சிகள் பெரியளவில் பணத்தை செலவிட்டிருக்கின்றன.
சிறிய கட்சிகளைப் பொறுத்தவரையில் இது ஒரு பிரதான பிரச்சினை அல்ல. அவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை.



அதேவேளை பெரிய கட்சிகளிடமிருந்து அந்தக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்துக்குப் பெற்றுக்கொண்ட பணத்தின் ஒரு பகுதியை இந்தத் தேர்தலுக்காக வைத்துக் கொண்டிருக்கின்றன.

பெரிய கட்சிகள் பில்லியன் கணக்கான ரூபாவை தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவிட்டிருக்கின்ற நிலையில் மீண்டும் இன்னொரு தேர்தலுக்காக நிதியை செலவிடுவது அல்லது திரட்டுவது என்பது சாதாரணமான விடயம் அல்ல.
உடனடியாக அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் பெரிய கட்சிகளையும், சிறிய கட்சிகளையும் திக்குமுக்காடச் செய்து விட்டது.

நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட்டு குறுகியகால அவகாசத்துக்குள் தேர்தல் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

2024, ஒக்ரோபர் 11ஆம் திகதியுடன் வேட்பாளர்பட்டியல் தாக்கல் செய்யப்படுவது நிறைவடைந்திருக்கிறது. 2024, நவம்பர் 14ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது.

இத்தேர்தலில் யார் ஆட்சியைப் பிடிக்கப் போகிறார் என்பது முக்கியமான விடயமாக இருக்கிறது.

அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி ஆகிவிட்டார். அடுத்த ஐந்து வருடங்களுக்கு அவர்தான் ஜனாதிபதி.

அவர் ஏற்கனவே நிறைய வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். கிட்டத்தட்ட 240 பக்கங்களில் தேர்தல் அறிக்கையை ஒரு புத்தகமாகவே வெளியிட்டவர் அவர்.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அவருக்கு பக்கபலமாக ஓர் அரசாங்கம் இருக்க வேண்டும். அந்த அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்தான் இப்பொழுது நடக்கப் போகிறது.

இத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றாக வேண்டிய நிலையில் தேசிய மக்கள் சக்தி இருக்கிறது.

அவ்வாறு வெற்றி பெறத் தவறினால் அதாவது அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான பலத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தவறினால், ஜனாதிபதி வேறு, அரசாங்கம் வேறு என்ற நிலை ஏற்படும். அது சிக்கலான ஒரு சூழலை உருவாக்கும்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது, 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது.

அப்போது சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

சமாதான முயற்சிகள், போர்நிறுத்தம் போன்றவற்றில் ஏற்பட்ட அந்த முரண்பாடுகளை அடுத்து, 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தியிருந்தார் சந்திரிகா.

இவ்வாறான நிலை அதற்கு முன்னரும் ஏற்பட்டதில்லை. அதற்குப் பின்னரும் ஏற்படவில்லை.

இந்த முறை அவ்வாறான ஒரு சூழல் ஏற்பட்டால், சந்திரிகாவைவிட இறுக்கமான போக்கைக் கடைபிடிக்கக்கூடிய அனுர குமார திஸாநாயக்கவும், சஜித் பிரேமதாசவும் மல்லுக்கட்டும் நிலையை ஏற்படுத்தும்.

இவ்வாறான ஒரு நிலை, அரசாங்கத்தை குழப்பத்திற்குள் தள்ளும். கடன் நெருக்கடியில் இருந்து மீளுகின்ற ஒரு நாட்டை, சர்வதேச அமைப்புகள், நாடுகளின் உதவிகளில் தங்கி இருக்கின்ற ஒரு நாட்டை, முன்னோக்கி நகர்த்துவதற்கு அது சிக்கலை ஏற்படுத்தும்.

சந்திரிகா குமாரதுங்கவைப்போல, மூன்று வருடங்களில் அனுர குமார திஸாநாயக்கவினால் நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் முடியாது. அவருக்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு நான்கரை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

எனவே, கீரியும் பாம்புமாக ஜனாதிபதியும் அரசாங்கமும் இருக்கின்ற ஒரு சூழல் உருவாவது இலங்கையைப் பொறுத்த வரையில் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். இது எல்லா மக்களாலும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு நெருக்கடியில் இருந்து தப்பிக் கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தியின் கையில் ஆட்சியைக் கொடுப்பதுதான் சரியானது எனப் பலர் தீர்மானிக்கக்கூடும்.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சிக்கு 56 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன. அதன் அடிப்படையில் வாக்குகள் கிடைத்தால், அறுதிப் பெரும்பான்மையை நெருங்கக்கூடிய அல்லது தாண்டக்கூடிய வாய்ப்புகள் அந்தக் கட்சிக்குக் கிடைக்கும்.
ஆனால் தேசிய மக்கள் சக்தி, தனது நீண்ட தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் முக்கியம். அதனை அடைவதற்கு பெரும்பாலும் சாத்தியம் இல்லை என்றே தெரிகிறது.

ஏனென்றால் 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவிற்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்த நிலையில், அதை அடுத்து நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு 68 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன.

ஆனாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அந்தக் கட்சியால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவே, கடந்த முறையைவிட சுமார் 13 இலட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்ற தேசிய மக்கள் சக்தியால் மூன்றில் இரண்டு ஆசனங்களைப் பெறுவது என்பது கடினம். விகிதாசாரமுறையில் நடைபெறும் தேர்தல்களில் ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவது இலகுவல்ல.

இந்தத் தேர்தலை எதிர்கொள்வதில் ஐக்கிய மக்கள் சக்தியும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, பொதுஜன பெரமுனவும் சரி, ஏனைய கட்சிகளும் சரி கடுமையான சவால்களை எதிர்கொண்டு இருக்கின்றன.

உள்ளக நெருக்கடிகள், வெற்றிமீது நம்பிக்கையில்லாத சூழல் போன்ற காரணங்களால், முக்கியமான அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் அரசியலைவிட்டு ஒதுங்குகின்ற அல்லது தற்காலிகமாக ஒதுங்கி இருக்கின்ற தீர்மானத்தை எடுக்கின்றனர், எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## B. பட்டப்படிப்பு நிறுவனங்கள்

• அரச பல்கலைக்கழகங்கள்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (1974), வவுனியா பல்கலைக்கழகம்(2021), இலங்கைத் திறந்த பல்கலைக்கழக வளாகம்(இரண்டு)



• இலங்கை உயர்தர தொழில்நுட்ப கல்வி நிறுவனம்.
• தனியார்துறை பட்டப்படிப்பு நிறுவனங்கள்: வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டம் பெற துணைபுரியும் தனியார்துறை கல்வி வளாகங்கள், யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் கிறிஸ்தவ சமயக் கல்வியை குருமாருக்கு வழங்கும் (செமினரி) நிறுவனங்கள்.

## C. தொழில் மற்றும் தொழில்நுட்ப திறன்சார் நிறுவனங்கள்

• பற்றிக்ஸ் தொழில் நுட்ப நிறுவனம்




• யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாயப் பாடசாலை
• திருநெல்வேலி அரச விவசாயப் பாடசாலை
• தனியார் தகவல் தொழில்நுட்பப் பாடசாலைகள்
• அரச மொழித்திறன் (தமிழ், சிங்களம்) பயிற்சி மையம்
• வவுனியா அரச விவசாயப் பாடசாலை

## D. தனியார் கட்டணம் அறவிடும் பாடசாலைகள்

• மழலையர் மற்றும் முன்பள்ளி நிறுவனங்கள்



• பாடசாலைக் கல்விக்குரிய குறை நிரப்பு தனியார் ரியூட்டரிகள்
• ஐரோப்பிய மொழிகள் போதிக்கும் நிறுவனங்கள்
• ஆங்கில மொழி கற்பிக்கும் நிறுவனங்கள்

## E. பண்பாட்டுக் கல்வி நிறுவனங்கள்

• அறநெறிப் பாடசாலைகள்
• நாட்டியம், சங்கீதம், ஓவியம், அழகு படுத்தல் சார்ந்த அழகியல் நிறுவனங்கள்

## F. ஆசிரிய கல்வி நிறுவனங்கள்

• யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கல்வியியல் துறை மற்றும் பட்டப்படிப்புகள் பீடம்
• இலங்கைத் திறந்த பல்கலைக்கழக வளாகம்
• கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை




• பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
• கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி
• பூந்தோட்டம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

திருநெல்வேலி கொக்குவில் பிரதேசமே ஒரு கல்விப் பெருநிலம்போல மாணவர்



கள், விரிவுரையாளர்கள், துணைநிலைப் பணியாளர்கள் என பல்லாயிரம் பேர் துருதுருவென இயங்குகின்ற பிரதேசமாகத் தென்படுகிறது. யாழ்ப்பாண இலங்கைத் திறந்த பல்கலைக்கழகங்களும் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியும், புராதன தொழில்நுட்பக் கல்லூரியும் மாணவர் விடுதிகளும் இப்பகுதியை சுறுசுறுப்போடு எப்போதும் இயங்கும் பொருளாதார மற்றும் அறிவு மேம்பாட்டு மையமாக மாற்றிவிட்டன.

1920களில் தொழில்நுட்பக் கல்லூரி இலங்கையின் முதலாவது தொழில்நுட்பக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டபோது இதில் இணைந்து கற்பது மதிப்பற்ற செயலாக எல்லோரும் கருதினர். இன்று முக்கியமான மனிதவளத் திறன்விருத்தி மையமாக இது வலிமை பெற்றுவிட்டது. 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கியபோது எதிர்ப்புத் தெரிவிக்க இளைஞர்களால் கைக்குண்டு வீசப் பட்டது. பல அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. திருநெல்வேலி சமூகத்தினர் பல்கலைக்கழக மாணவர்களுடன் கலவரத்தில் ஈடுபட்டனர்.

இன்று நிலமதிப்பு உயர்ந்துவிட்டது. வாடகை வருமானங்கள் கூடிவிட்டன. வணிக நிறுவன விற்பனைகள் பல்கிப் பெருகிவிட்டன. பல்கலைக்கழகத்தை இப் பிரதேசத்திலிருந்து அகற்றினால் பெரிய சமுதாயக் கலவரமே ஏற்படுத்திவிடும் என்ற நிலைமையுண்டு.

கிழக்கிலங்கையில் கிழக்கு பல்கலைக் கழகம் தொடங்குவதற்கு முதலகட்ட அவசர தேவையாக வந்தாறுமூலை மத்திய கல்லூரி அரசினால் பொறுப்பு ஏற்கப்பட்டது. ஆனால் பின்பு தனியாக புதிதாக அதே பாடசாலை வந்தாறுமூலை மத்திய கல்லூரி அதே பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு முதற்கட்ட தேவைக்காக பரமேஸ்வராக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி கல்விப்பகுதிக் கட்டிடங்களும் அரசாங்கத்தினால் பொறுப்பு ஏற்கப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் பரமேஸ்வராக் கல்லூரி திரும்ப கட்டிக் கொடுக்கப் படவில்லை. அக்கல்லூரியில் படித்த பழைய மாணவர்களும் அங்கு கற்பித்த ஆசிரியர்களும் பரமேஸ்வராக் கல்லூரியைத் தேடியலைகின்றனர். அப்படியொரு கல்லூரி திருநெல்வேலியில் இல்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீடங்கள் (Faculties) வடபகுதியின் பல பிரதேசங்களில் இதே மாதிரியிலான



கல்வி மற்றும் சமூக, பொருளாதார ரீதியிலான சாதகமான விளைவுகளையும் பரவிச் செல்லும் நன்மைகளையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன.

★ கிளிநொச்சி - பொறியியல், விவசாய பீடங்கள்
★ பாற்பண்ணையடி, திருநெல்வேலி - முகாமைத்துவ பீடம்
★ கைதடி - சித்த மருத்துவ பீடம்
★ மருதனா மடம், இணுவில் - இசை மற்றும் நாட்டிய பீடம்
★ இணுவில் - ஓவியம், வடிவமைப்பு பீடம்




இத்தகைய பல்கலைக்கழக விரிவாக்கம் வவுனியா பல்கலைக்கழகத்தின் பம்பைமடு பிரதேசத்திலும் பூந்தோட்டம் பகுதியிலும் சமகாலத்தில் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. கோப்பாய் பிரதேசத்தில் ஒரு தேசிய



கல்வியியல் கல்லூரியும் வவுனியாவில் பூந்தோட்டம் பகுதியில் ஒரு தேசிய கல்வியியல் கல்லூரியும் செயற்படுவதாலும் இதே வகையிலான கசிந்து கசிந்து சமூகத்தினுள் பரவிச் செல்லும். விளைவு (Spillover effects)களும் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)



## நாமும் நமது இல்லமும் 664

# ஆதன வியாபாரம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

காலங்களுடன் நிலைமைகளும் மாறுவதைக் காணலாம். இருபது (20) வருடங்களுக்கு முன்பாக ஓர் அடுக்குமனை அல்லது ஆதன வீடு நிர்மாணம் செய்யும்போது ஒவ்வொரு அறைக்கும் நிச்சயமாக ஒரு யன்னலும் (Window), உடுப்புகள் வைப்பதற்குரிய தனியான இடமும் (Closet) வைத்தே அறைகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு அறையும் நியாயமான அளவில் (size) காணப்பட்டன. வருடா வருடம், அரசு வரிகளும், நிர்மாணத்திற்குரிய அரசுக்குக் (Development) கொடுக்கப்படும் பணமும், நிலத்தின் விலை அதிகரிப்பும், தொழில்புரிவதற்குரிய செலவுகளும் அதிகரித்தே வந்தன. இதனால் ஒவ்வொரு சதுரஅடி கட்டுவதற்குரிய செலவும் அதிகரித்தே வருகின்றது.

ஆதனத்தை வாங்குவோரிற்குரிய செலவு மிகவும் அதிகமாக இருப்பதால் நிர்மாண உரிமையாளர்கள் புதியவிதமான புதிய நோக்கங்கள், திட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு சதுரஅடி அடுக்குமனை $250-$300 வரையான விலையில் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் விற்கப்பட்டது. அத்துடன் ஒரு வாகனத்தரிப்பு இடமும், இந்த விலையில் உள்ளடங்கியது. ஏறக்குறைய ஒரு சதுர அடிக்கு ($25-$35)வரை வாகனத் தரிப்பிற்கு செலுத்தப்பட்டதாகக் கொள்ளலாம்.

அதாவது சதுரஅடியின் உண்மையான விலை ($225-$265)ஆக விற்கப்பட்டதாகக் கொள்ளலாம். அப்பொழுது ஆதன விலையின் 5% முதலீட்டுடன் ஆதன மனை வாங்கக்கூடியதாக இருந்தது.

இன்றைய நிலையில் ஏறக்குறைய 20 வருடங்களின் பின்பாக இதே ரொறொன்ரோ மத்திய பகுதியில் ஒரு சதுரஅடி $1100இலிருந்து-$1300வரை விற்கப்படுகின்றது. புதியமனையின் சராசரி விலையாக (சில சந்தர்ப்பங்களில்) சதுர அடி $2000வரையும் விற்கப்பட்டன/விற்கப்படுகின்றன.

வாகனத் தரிப்பிற்கு மேலதிகமாக $60,000 இலிருந்து $90,000வரையும் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையினால் புதியமனைகள் வாங்குவோர் சந்தையிலிருந்து முற்றாக விலகிவிட்டனர். அத்துடன் கடந்த 4-5 வருடங்களில் வாங்கியோர் ஆதனத்தின் மாதக் கொடுப்பினவிற்கு மேலதிக பணத்தைச் செலுத்தவேண்டிய, இறுக்கமான நிலையில் உள்ளனர். இதனால், வாடகைக்குச் செல்வது சிறந்தது எனப் பலர் கருதுகின்றனர்.

கட்டிட நிறுவனங்கள் மற்றும் அடுக்குமாடி மனையை நிர்மாணம் செய்வதனை நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் தள்ளிப் போடுகின்றனர். அல்லது அடுக்குமனை கட்டுவதனை முற்றாக தவிர்க்கின்றனர்.


புதுவித திட்டங்களை, செயல்முறைகளை புதியமனையின் அமைப்பு முறைகளில் கட்டிட நிபுணர்கள் (Designers/Architects) நடைமுறைப்படுத்துகின்றனர்.

சாளரங்கள் (யன்னல்கள்) இல்லாத அறைகளை வெளிப்படுத்துகின்றனர். (படத்தை பார்க்கவும்)

இவ்வாறான அறைகள், அமெரிக்காவில், பல்கலைக்கழக மாணவர்களுக்காக ஏற்கனவே கட்டப்பட்டன. இது அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது. சில மேற்கத்திய நாடுகளில் யன்னல் இல்லாத அறைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. கனடாவில் குறிப்பாக, ரொறொன்ரோவிலும் முன்பு தடை செய்யப்பட்டு இருந்தது. இன்று நிலைமை மாறிவருகின்றது.

பொதுவாக யன்னல்கள் இருப்பது காற்றோட்டத்திற்கும், வெளிச்சத்திற்கும் முக்கியமானது. குறுகிய காலத்திற்கு, அதாவது மாணவர்களாக இருக்கின்ற காலங்களில், ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருக்கும். தொடர்ந்து வாழ்வது என்பது அவர்களின் முடிவே.

எனினும், இவ்வாறான மனைகள்,



படத்தில் காட்டப்பட்ட இருஅறைகளுக்கும் யன்னல்கள் கிடையாது. எனினும், ஓர் அறை கட்டிடத்தின் யன்னலினால் வரும் வெளிச்சத்திலிருந்து அறைக்கு வெளிச்சம் பாய்ச்சுகின்றது. மற்றைய அறைக்கு வெளிச்சம்வரக்கூடிய வசதியே கிடையாது.

இன்றைய நெருக்கடி சூழலில் அடுக்கு மாடிக் கட்டிடத் தொகுதியில் வருவதனைக் காணலாம். பொதுவாக, இவ்வாறான மனைகளின் அமைப்பு நீளமாக இருப்பதைக் காணலாம். புதிய எண்ணக்கருக்கள் நாளுக்கு நாள் வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும், வாடகையும், அடுக்கு மனையின் விலையும் குறையுமா என்பது கேள்விக்குரியதே.

**பலகாரத் தேவைகளுக்கு**



ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு
அழையுங்கள்: **647.765.2250**

## தமிழர் தேசம் மீட்டெடுப்பீர்!

தமிழீழத் தாயகத்து என தருமைப் பிறவிகளே!
மேய்ப்பனில்லா ஆடுகளாய்த் தத்தளிக்கும் உறவுகளே!
சுயநலத்தின் வேரறுத்து, அர்ப்பணிப்புச் சேவையோடு
உயிரினையே தியாகம் செய்யும் தலைவர்களை தேர்ந்தெடுங்கள்

தேர்தற்காலம் பரம் பொருளின் அருள்வழங்கும் பொற்காலம்
தேர்ந்தெடுக்கும் தலைவர்களின் கொள்கைகளை, செயற்றிறனை
கூர்மையுடன், மதியூக சிந்தையுடன் காய் நகர்த்தும்
நேர்மையுள்ள, ஊக்கத்தோடுழைக்கின்ற தலைவர்களை
இனங்கண்டு தேர்ந்தெடுத்து தமிழினத்தை மீட்டெடுங்கள்



இருபத்தி யைந்தாண்டு தமிழினத்தின் காவலனாய்
உரம் கொண்ட நெஞ்சுடனே உறுதியுடன் தந்தைசெல்வா
சிங்களத்துத் தலைவர்களுடன் அகிம்சைவழிப் போராடித்
அவ்வழியே போராட்டத்தை முன்னெடுத்து
சமஷ்டியாட்சிக் கொள்கையினை அச்சமின்றி வென்றெடுப்போம்

இழந்த மண்ணை மீட்க வேண்டும் பழிசுமக்கும்
பாவியராய்க் கதறியழும் மக்கள் கண்ணீர்த்
துளியகற்றி அவர்கட்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும்
காணாமல் போனவனைத் தேடியெங்கும் அலைந்தலைந்து
போராடும் மக்களுக்கோர் விடிவுகண் டாக வேண்டும்
துடிப்புடைய உறவுகளே! உத்தமரைத் தேர்ந்தெடுங்கள்

நீண்டகாலம் சிறைகளிலே வாடுகின்ற இளைஞர்களை
மாண்டழியும் முன்னதாக மீட்டெடுக்கும் துணிச்சலுடன்
அநீதிக்கு எதிராக அகிம்சைப்போர் முன்னெடுத்து
தொடர்ந்தெம்மை ஏமாற்றித் தம்கருமம் சாதிக்கும்
ஆட்சியாளர்க் கெச்சரிக்கை விடுக்கவல்ல தலைவர்கள்
துடிப்புடைய இளைஞர்களே! ஒன்றிணைந்து தேர்ந்தெடுங்கள்

அத்துமீறி நிலம்பறித்து, இருப்பிடங்கள் தகர்த் தெறிந்து
புத்தர்சிலை எழுப்பி வைத்து, புதியபல விகாரைகளை
எத்திசையும் தொடர்ந்தமைக்கும் சண்டாளர் செயல்களினால்
தாயகமண் கைபறித்து தமிழர் தேசம் சுருங்குகையில்
ஆட்சியாளர் அருகமர்ந்து வேடிக்கை பார்க்கின்ற
இனமான உணர்ச்சியில்லாத் தலைவர்களை ஒதுக்குங்கள்

இலங்கை தேசமின்று பிளவுபட்டு நிற்கையிலே,
தமிழர்பலம் வெண்ணெய்போல் ஒன்றிணைந்து திரள்கையிலே
அகிம்சைவழிப் போர் தொடுத்துப் பேரம் பேசும் வல்லமையோடு
உரிமைகளை மீட்கவல்ல, போராடிக் களம்கண்ட
மறவர்களைத் தேர்ந்தெடுத்துத் தாயகத்தை மீட்டெடுப்பீர்

இத்தனையாண்டு காலமாக ஆட்சியாளர் எமக்கிழைத்த
அழிவுகட்கு அடித்தளமே ஒற்றையாட்சி என்றறிவீர்
சமஷ்டியாட்சிக் கொள்கையோடு உரிமைகட்குப் போராடும்
அபேட்சகர்க்கு வாக்களித்துத் தமிழர்தேசம் மீட்டெடுப்பீர்

புலம் பெயர்ந்து வாழுகின்ற எனதருமைப் பிறவிகளே!
தாயகத்து உறவுகளைக் கரம் கொடுத்துத் தாங்குங்கள்
கட்சிபேதம் பாராது பொறுப்புணர்ந்து செயற்படுவோம்
கடவுள் எமக்கருள் புரிவார் கலங்குவாரை மீட்டெடுப்போம்

மாரீசன்

# இலங்கையில்.....

05ஆம் பக்கத்தொடர்ச்சி

வேட்பாளர்களை அவர்கள் சமர்ப்பித்த தேசிய வேட்பாளர் பட்டியலில் இருந்தோ அல்லது தேர்தல் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்தோ தெரிவு செய்யலாம்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்:
வாக்குகள் எண்ணப்படும் முறையை விளக்க 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் கணிப்பைப் பார்ப்போம்.

**Table 3**
**2015 General Election - Jaffna Electoral District**

| கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | கட்டம் 4 | கட்டம் 5 | கட்டம் 6 |
|---|---|---|---|---|---|
| Name of Parties/ Individual Groups | Number of Votes | Percentage of Votes | Number of Votes | MPs Calculated | Actual Number of MPs |
| 1. ITAK | 207,577 | 69.12% | 207,577 | 4.2922 | 1+4 |
| 2. EPDP | 30,232 | 10.07% | 30,232 | 0.6251 | 1 |
| 3. UNP | 20,025 | 6.67% | 20,025 | 0.4141 | 1 |
| 4. UPFA | 17,309 | 5.76% | 17,309 | 0.3579 | 0 |
| 5. AITC | 15,022 | 5.00% | 15,022 | 0.3106 | 0 |
| 6. IND 04 | 1,979 | 0.66% | 0 | | |
| 7. IND 02 | 1,706 | 0.57% | 0 | | |
| 8. All Others | 6,459 | 2.15% | 0 | | |
| | | | | | |
| Total Valid Votes | 300,309 | 100.00% | 290,165 | | 7 |
| 5% of Valid Votes | 15,015 | | | | |
| Rejected Votes | 25,496 | 7.83% | | | |
| Total Polled | 325,805 | 61.56% | | | |
| Total Electors | 529,239 | | | | |
| One MP Required | | | 48,361 | | |

அட்டவணை 3இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட 5 கட்சிகளும் 2 சுயேட்சைக் குழுக்களினதும் பெயர்கள் குறியீட்டு வடிவில் கட்டம் 1இல் முதல் 7 வரிசைகளில் மேலிருந்து கீழாகக் காட்டப் பட்டுள்ளன. எட்டாவது வரிசையில் மிகக் குறைவான எண்ணிக்கையான வாக்கு களைப் பெற்ற எல்லாக் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டம் 2இல் ஒவ்வொரு கட்சி/சுயேட்சைக்குழுவும் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை உள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 2015இல் 529,239. அதில் 61.56%ஆனோர் வாக்களித்திருந்தனர்.

அதிலும் செல்லுபடியற்ற 7.83%ஆன வாக்குகள் போக மீதமுள்ள மொத்த வாக்குகள் 300,309 ஆகும். அதை 100% ஆகக்கொண்டு பார்த்தால் 5% வாக்குகளின் எண்ணிக்கை 15,015 ஆகும்.

தேர்தல் விதிமுறைப்படி 15,015இற்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் /சுயேட்சைக் குழுக்கள் நீக்கப்படுகின்றன (கட்டம் 3). இவைபோக மீதமுள்ளவை ஐந்து கட்சிகளே. இந்த ஐந்து கட்சிகளும் மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 290,165. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு ஏழு உறுப்பினர்கள் அப்போது வழங்கப் பட்டிருந்தது. தேர்தல் விதிமுறைப்படி அதில் ஓர் உறுப்பினர் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ITAKஇற்கு வழங்கப்படுகிறது.

290,165 வாக்குகளின் என்னிக்கையை மீதமுள்ள ஆறு உறுப்பினர்களின் எண்ணிக்கையால் பிரித்தால் ஓர் உறுப்பினர் தெரிவுக்கு 48,361 வாக்குகள் வேண்டும் (கட்டம் 4). தற்போது 5% இற்குக் கூடிய வாக்குகளைப் பெற்ற ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளை 48,361ஆல் பிரித்துப் பார்ப்போம் (கட்டம் 5).

ITAK மட்டும் 4 முழு எண்ணைப் பெறு வதால் அதற்கு மேலும் 4 உறுப்பினர்கள் வழங்கப்படுகிறது. இத்துடன் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்குரிய ஏழு உறுப்பினர்களில் 5 பேர் (ஏற்கனவே 1, இப்பொழுது 4) கட்சிகளுக்கு ஒதுக்கப் பட்டுவிட்டனர். மீதமுள்ள 2 உறுப்பினர் களும் கட்டம் 5இல் அதிகூடிய மீதி வாக்குகள் உள்ளவர்களான EPDP (0.6251)க்கு ஒன்றும், UNP (0.4141)க்கு ஒன்றுமாக வழங்கப்பட்டது.

இம்முறை 2024 நொவெம்பர் 14இல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 23 கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக் குழுவும் ஒன்பது பேரை தமது வேட்பாளர் பட்டியலில் சமர்ப்பித்துள்ளன.

வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் 23 கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களினதும் பெயரும் அவற்றிற்குரிய சின்னமும் பதிக்கப்பட்டிருக்கும். அதன்கீழ் அந்த வாக்குச் சீட்டில் வேட்பாளர்களுக் குரிய இலக்கமாக 1 தொடக்கம் 9வரை எழுதப்பட்டிருக்கும். வாக்காளர்கள் வாக்குச்சீட்டிலுள்ள 44 பெட்டிகளில் (கட்சி கள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள்) ஒன்றிற்கும், வாக்குச்சீட்டிலுள்ள வேட்பாளர் களுக்கு உரிய இலக்கங்கள் 1இலிருந்து 9வரை உள்ளவற்றில் மூன்று இலக்கங்கள் மீதும் புள்ளடி இடவேண்டும். தமது தெரிவுசெய்த கட்சிக்குரிய வேட்பாளர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் இருக்காது. அவர்களுக்கு உரிய இலக்கம் மட்டுமே அங்கே இருக்கும். வேட்பாளர்களின் பெயருடன் அவருக்குரிய இலக்கம் வாக்குச்சாவடியில் வெளியில் வைக்கப் பட்டிருக்கும் அல்லது அவற்றை முன் கூட்டியே கட்சிகளின் அலுவலகம் அல்லது இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

உலகிலேயே இது ஒரு சிறந்த தேர்தல் முறையாகக் கொள்ளலாம். கனடாவில் இவ்வாறு ஒரு தேர்தல் முறை நடைமுறைப்படுத்த வேண்டும் என எல்லாக் கட்சிகளுமே வலியுறுத்தி வருகின்றன. இந்த முறையில் ஒவ்வொரு வாக்கிற்கும் பலம் உண்டு. எனவே இத்தேர்தலில் வாக்கு இடுதல் மிக முக்கியமாகும்.

# இழக்கப்படும்.....

04ஆம் பக்கத்தொடர்ச்சி

திருகோணமலையில் வீடு சின்னத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி இணங்கி இருக்கிறது. ஆனால் அம்பாறையில் சங்கு சின்னத்தில் போட்டி யிட தமிழரசுக் கட்சி மறுத்து விட்டது.

தமிழரசுக் கட்சியின் இந்த சுயநலப் போக்கினால் அம்பாறை மாவட்டத்தில் தனித்தனியாகப் போட்டியிடும் நிலைக்கு தமிழ்க் கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன. இதனால், அங்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இழக்கப்படுவது உறுதியாகி விட்டது.

திருகோணமலையில் ஒரு பிரதிநிதித்துவத் தைக் காப்பாற்றுவதில் தமிழ் கட்சிகள் ஓரளவுக்கு இணக்கத்துக்கு வந்திருப்பது ஆறுதலானது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிகபட்ச சுயேச்சைக்குழுக் களும் பிள்ளையான் போன்ற தரப்புக் களும் வாக்குகளைப் பிரிக்கக்கூடிய நிலையில் இருப்பதால், தமிழ் தேசிய கட்சிகளுக்கு இம்முறை கடும் சவால் காத்திருக்கிறது.

அங்குள்ள ஐந்து ஆசனங்களில், நான்கு ஆசனங்களை தமிழ்க் கட்சிகளால் கைப்பற்றக்கூடியதாக இருக்கும்.

ஆனால் பிளவுபட்டுப் போட்டியிடுவதால் அந்த ஆசனங்களின் எண்ணிக்கை, மூன்றாகவோ அல்லது அதைவிடக் கீழாகவோ குறைகின்ற நிலையும் ஏற்படலாம்.



வன்னி மாவட்டத்திலும் இதே சிக்கல் இருக்கிறது. அங்கு ஆறு ஆசனங்கள் இருந்தாலும் இரண்டு ஆசனங்களைச் சென்றமுறை முஸ்லிம்கள் கைப்பற்றினர். இம்முறை ஓர் ஆசனத்தைச் சிங்கள வேட்பாளர் கைப்பற்றினாலும், ஆச்சரியம் இல்லை.

தமிழ் கட்சிகளின் மீதான வெறுப்புகளும் அதிருப்தியும் அதிகரித்துவரும் சூழலில், அவை சுயநலப் போக்குடன் செயற்பட்டு வருவதால், வடக்கு கிழக்கில் இருந்து மிகக் குறைந்தளவான, தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவா கின்ற நிலையே ஏற்பட்டுள்ளது.

# மாற்ற அலையில்..

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இன்னொரு பக்கத்தில் இலங்கை அரசியலில் மூத்த அரசியல்வாதிகளாக இருந்த பலர் இப்பொழுது முதுமைக் கட்டத்தை அடைந்திருக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ச, லக்ஷ்மன் கிரியல்ல, சமல் ராஜபக்ச, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, ரணில் விக்கிரமசிங்க, காமினி லொக்குகே, மஹிந்த யாப்பா அபேவர்த்தன, மைத்திரிபால சிறிசேன போன்றோர் முதுமை காரணமாக ஒதுங்குகின்றனர்.

அவர்களுக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட இடம் கிடைப்பதும் கடினம். கிடைத்தாலும், வெற்றி வாய்ப்பும் குறைவு. அந்த நம்பிக்கையீனத்தால் ஒதுங்கிப் போகத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை இளம் அரசியல்வாதிகள் பலரும்கூட இம்முறை தங்களால் வெற்றி பெற முடியாது என்ற சூழலில் அரசியலை விட்டு தற்காலிகமாக ஒதுங்கி இருக்க முனைகின்றனர்.

கோட்டாபய ராஜபக்ச 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற போதும்கூட, இப்படியான ஒரு நிலை காணப்படவில்லை.

ஆனால் 56 இலட்சம் வாக்குகளுடன், அதுவும் 50 சதவீதம் வாக்குகளை முதற்கட்ட வாக்கு எண்ணிக்கையில் பெற்றுக்கொள்ளாமல் அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியானவுடன் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்கிறது.



இந்தத் தேர்தலில் மாற்ற அலை ஒன்று தீவிரமாக வீசுகிறது.

இந்த அலையில் தாங்களும் அள்ளுப் பட்டுப் போய்விடக்கூடாது என்பதால், பலர் இப்போதே பாதுகாப்பாக பதுங்கிக் கொள்ள முனைகின்றனர்.

இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் எப்படியும் தேசிய மக்கள் சக்திக்கு சாதகமான ஒன்றாகவே இருக்கப் போகிறது.

# நானிலம் போற்றும் நட்பு - 54



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் நாற்பத்தொன்றாம் செய்யுளைக் கவனிப்போம்.

“அலந்தார்க்கு ஒன்று ஈந்த புகழும், துளங்கினும்
தன் குடிமை குன்றாத் தகைமையும், அன்பு ஒடி
நாள் நாளும் நட்டார்ப் பெருக்கலும், இம் மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை.”

“அலந்தார்க்கு” என்றால் “துன்பப்பட்டவர்க்கு” என்று பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “துன்பப்படுவோருக்கு ஈதலும், வறுமையான காலத்திலும் ஒழுக்கத்தோடு இருத்தலும், நட்புச் செய்தவரைப் பெருகச் செய்தலும் முதன்மையான அறங்களாகும்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

துன்பத்திற்குள்ளாகி இருப்போருக்குக் கொடுத்து உதவுதலை முதன்மையான அறம் என்று புலவர் இந்தச் செய்யுளில் குறிப்பிடுகின்றார். வறுமையான காலம் வந்தாலும் ஒழுக்கத்தோடு இருத்தலையும் புலவர் முதன்மையான அறம் என்று கூறியுள்ளார். மேலும் நட்புச் செய்தவரை முதன்மை பெற உதவுதலும் முதன்மையான அறம் எனப் புலவர் கூறுகின்றார்.

புலவரால் இந்தச் செய்யுளில் நட்பு பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் குறிக்கப்பட்ட அறிவுரைகள் மிகவும் பயனுள்ள அறிவுரைகளாக உள்ளன. புலவரின் நட்பு பற்றிய கருத்து காரணமாக இந்தத் தொடர்கட்டுரைக்கு வலிமை சேர்க்கும் விதமாக இங்கு இணைத்துள்ளேன்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி இருபத்தி ஏழாவது பாடலைக் கவனிப்போம்.

இது ஓரம்போகியார் என்னும் புலவர் பாடிய பாட்டு. பரத்தையரிடம் சென்ற தலைவன், ஒரு பாணனைத் தலைவியிடம் தூதாக அனுப்பினான். அவன் பின்னே தானும் வந்து நின்றான். தூதாக வந்த பாணன் தலைவன் குற்றவாளி அல்ல என்று தலைவியிடம் கூறினான். அதைக் கேட்ட தோழி தலைவனைப் பார்த்துச் சொல்லியது. இது மருதத்திணை சார்ந்தது.

ஒரு தலைவன். அவன் மருத நிலத்திலே வாழ்பவன். செல்வச் செருக்குடையவன். தனது காதலியைப் பிரிந்து பரத்தையர்களுடன் கூடிக் குலாவியிருந்தான். சில நாட்கள் கடந்ததும், பரத்தையர் கூட்டுறவு அவனுக்குப் புளித்துப் போய்விட்டது. தன்னிடம் உண்மையான அன்புள்ள இல்லக்கிழத்தியின் நினைவு வந்துவிட்டது. ஆதலால் தனது இல்லத்திற்குத் திரும்ப நினைத்தான்.

தனது பாணனை முன்னே தூதாக அனுப்பினான் அவன் பின்னே தலைவனும் போனான். பாணன் தலைவியைக் கண்டான். அவளிடம் உனது, தலைவன் ஒரு பொழுதும் உன்னை மறக்கவில்லை. அவன் ஒழுக்கங் கெட்டவனும் அல்லன் பரிசுத்தமானவன் என்றும் கூறினான்.

பரத்தையர்களிடம் போய் வந்த தலைவனைப் பற்றிப் பாணன் கூறிய இச்சொற்களைக் கேட்டுத் தலைவி ஒன்றும் பேசவில்லை. ஆனால் தோழிக்கு இச்சொற்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவள் பாணனுக்குப் பின்னாக நின்ற தலைவனைப் பார்த்து அவனுடைய பொய்யினை உடைத்து விட்டாள்.

“குருகு கொளக் குளித்த கெண்டை அயலது
உரு கெழு தாமரை வான் முகை வெரூஉம்,
கழனி அம் படப்பைக் காஞ்சி யூர!
ஒரு நின் பாணன் பொய்யன் ஆக,
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர் நீ அகன்றிசி னோர்க்கே”.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“காஞ்சி மரங்கள் நிறைந்த ஊரையுடைய தலைவனே! உன் ஊரில் உள்ள வயல்களில் எல்லாம் தாமரைகள் முளைத்துப் பூத்திருக்கும். அந்த வயல்களிலே நாரைகள் மீன்களைப் பிடித்துத் தின்னும். நாரைகளின் வாயிலிருந்து நழுவித் தண்ணீரில் விழுந்த மீன்கள் நீருக்குள் அழுந்தி மேலே வந்தபோது, உயர்ந்து வளர்ந்திருக்கின்ற தாமரை மொட்டுக் களைக் கண்டு அஞ்சும். அவை நாரைகளைப்போலக் காணப்படுவதால் மீண்டும் தம்மைப் பிடிப்பதற்காக நாரைகள் வந்துவிட்டனவோ என்று எண்ணிப் பயமடையும்.

இத்தகைய சிறந்த ஊரின் தலைவனான உன்னுடைய பாணன் ஒருவன் பொய் சொல்வதைக் கேட்கின்றோம். இதனால் உன்னுடைய பாணர்களைப்பற்றி நாங்கள் சந்தேகப்படுகின்றோம். நீ பிரிந்ததனால் தனித்திருக்கும் மகளிரிடம் உனது பாணர்கள் அனைவரும் பொய் பேசுவார்கள் உண்மை பேச மாட்டார்கள் என்றே நாங்கள் நினைக்கின்றோம். ஆகையால் உனது தூதன் கூறும் பொய்யினை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்” என்று கூறினாள்.

“தலைவனே! உனது பாணன் உண்மையுரைக்கவில்லை. பொய் பேசுகின்றான்” என்பதாக தலைவனிடம் தோழி வாதாடுவது நட்பின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றி இருபத்தி ஒன்பதாவது பாடலைக் கவனிப்போம்.

இது கோப்பெருஞ் சோழன் பாட்டு. தலைவியுடன் கூடியிருந்து மீண்ட தலைவனைக் கண்ட தோழன் “உன் கவலைக்குக் காரணம் என்ன” என்று கேட்டபோது தலைவன் கூறிய செய்தியைக் கூறுவது இப்பாடல். இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

ஒரு தலைவன். அவன் தனது காதலி தலைவியுடன் கூடியிருந்து திரும்பினான். அருமைத் தலைவியை விட்டுப் பிரிந்து போகிறோமே, இனி எப்பொழுது காண்போம் என்ற கவலையுடன் திரும்பி வருகின்றான். அவனுடைய உள்ளக் கவலை அவன் முகத்திலே துள்ளிக் கொண்டிருக்கின்றது.

இத்தலைவன் தன் தோழனிடம் நெருங்கினான். தோழன் தனது தலைவனுடைய முகத்தை உற்று நோக்கினான். உள்ளக் கவலை முகத்திலே திரையிட்டிருந்ததைக் கண்டான். “கலங்காத உள்ளம் படைத்த உனது நெஞ்சிலே கவலை தோன்றிய காரணம் என்ன?” என்று கேட்டான்.

நண்பனுடைய உள்ளத்திலே ஏதேனும் துன்பம் இருந்தால் அதையும் அறிந்து கொள்ளும் இயல்பு கொண்டவன் நண்பன். நண்பனுடைய உடைமைகளுக்குச் சேதம் ஏற்படாமலும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கும் தன்மையும் உண்மையான நண்பர்களின் இயல்பு.

ஒருவர் நலத்தை மற்றொருவர் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பதில் முனைந்து நிற்பவர்களே உண்மையான நண்பர்களாய் நிலைத்து வாழமுடியும் என்ற உண்மையை இந்தப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

“எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ! கேளாய்! அத்தை
மாக்கடல் நடுவண் எண்ணாள் பக்கத்துப்
பகவெண் திங்கள் தோன்றி ஆங்குக்
கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்
புதுக் கோள் யானையின் பிணித்து அற்றால் எம்மே”.




இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“எனது உள்ளங் கலந்த உத்தம நண்பனே! உன்னுடன் பழகும் இளைஞர்களை எல்லாம் எப்பொழுதும் இன்பம் அடையச் செய்வாய். இத்தகைய சொல்லும், அரிய செயலும், உயர்ந்த குணமும் அமைந்தவன் நீ. இது மட்டுமா? நீ சிறந்த அறிவுள்ளவன், ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் அவர்களின் முகக்குறிப்பால் கண்டுகொள்ளும் ஆற்றல் உள்ளவன். ஆதலால் உன்னை அறிஞர்கள் எல்லாம் நண்பனாகக் கொண்டிருக்கின்றனர். உன்னிடத்தில் நான் உண்மையை மறைக்க முடியாது. என் முகத்திலே மாறுதல் ஏற்பட்டதற்கான காரணத்தைச் சொல்கிறேன் கேள்!

நான் சென்ற இடத்திலே ஒரு காட்சியைக் கண்டேன். அக்காட்சி என்னை அடிமைப் படுத்திவிட்டது. பெரிய கடலின் நடுவிலே எட்டாம் நாள் சந்திரன் தோன்றும் காட்சியை நீ பார்த்திருப்பாய். அதைப்போல கருமையான கூந்தலின் பக்கத்திலே சிறிய நெற்றியைக் கண்டேன். கடல் போன்ற கரிய கூந்தலையும் எட்டாம் நாள் அரைமதியைப் போன்ற சிறிய நெற்றியையும் உடையவள் சிறந்த பண்பும், அழகும் அமைந்தவள்.

அவளுடைய அழகிய நுதல் என்னைப் பிணித்து விட்டது. புதிதாகப் பிடிபட்ட யானை போல நான் அவளுடைய நுதலால் கட்டுண்டேன். இதுதான் என் மாறுதலுக்குக் காரணம் என்று கூறினான் தலைவன். தலைவன் தான் சந்தித்த தலைவியின் அழகை தோழனுக்குக் கூறியதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

“ஓர் அழகிய மங்கை என் மனத்தைக் கொள்ளை கொண்டாள்” என்பதை ஒளிவு மறைவு இன்றித் தலைவன் தனது தோழனிடம் தெரிவித்தான்.

எலுவன் என்றால் நண்பன் எனவும், பசுமை என்றால் இளமை என்றும், கதுப்பு என்றால் கூந்தல் என்றும் பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர் கூறியுள்ளார்.

கூந்தலுக்குக் கடலும், நெற்றிக்குத் திங்களும் உவமானங்கள். ‘புதுக் கோள் யானை’ தலைவனுக்கு உவமானம். தலைவன் இதற்கு முன்பாக எந்தப் பெண்ணிடமும் தனது நெஞ்சைப் பறி கொடுக்காதவன். எந்தப் பெண்ணின் அழகிலும் மயங்காதவன். இப்பொழுதுதான் புதிதாக ஒரு பெண்ணைக் காதலித்தான். அவன் காதலிலே கட்டுண்டான். இந்த உண்மையைப் ‘புதுக் கோள் யானை’ என்ற உவமை விளக்குகின்றது.

இந்த இரண்டு பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். ‘நானிலம் போற்றும் நட்பு’ என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# இந்தியப் பிரதமரும் தலைமை நீதிபதியும் விநாயகர் சதுர்த்தியால் வந்த வினை

**கண்ணன்**

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில் கடந்துபோன விநாயகர் சதுர்த்தி விழாவிற்காக, இந்திய தலைமை நீதிபதி (உச்ச நீதிமன்ற நீதியரசர்) சந்திர சூட் இல்லத்திற்குச் சென்றது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. இந்திய உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற மற்றும் இதர நீதிபதிகள் அரசு அதிகாரத்திடமிருந்து விலகி நிற்க வேண்டும் என்கிற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளமான கொள்கைக்கு இது முரணாக உள்ளது குறிப்பிடத்தக்கது. “இந்தச் சம்பவம் அரச நிர்வாகத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான நெருக்கத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இது வரும் காலங்களில் ஏதேனும் பேராபத்தை ஏற்படுத்தக்கூடும்” என்று நடுநிலையாளர்கள் பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த அச்சம் நியாயமானதுதானா அல்லது அரசியல் நோக்கம் கொண்டதா?

மே 07, 1997அன்று நடைபெற்ற இந்திய நீதிமன்றக் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மறு அறிக்கையின் பத்தி 6இல் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது. “நீதிபதியானவர், தனது மரியாதையைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, அரசு அதிகாரத்திடமிருந்து விலகியே இருக்க வேண்டும்.” இதனை இந்திய உச்ச நீதிமன்றத்தின் இணையத்தளத்தில் இன்றும் காணலாம்.

இந்நிலையில்தான், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, விநாயகர் சதுர்த்தி விழாவிற்காக, இந்திய தலைமை நீதிபதி சந்திர சூட் இல்லத்திற்குச் சென்றது தொடர்பான புகைப்படங்கள், 2024, செப்டம்பர் 12அன்று, சமூக வலைத்தளங்களில் பரவி சட்டத்துறையைக் கடும் கோபத்தில் ஆழ்த்தின.

“சந்திர சூட் 2024, நவம்பர் 10இல் பணி ஓய்வு பெற இருக்கும் நிலையில், ஓய்விற்குப் பிறகு, அரசிடமிருந்து ஆதாயம் பெறுவதற்கான பேச்சுகளை இப்போதே தொடங்கிவிட்டாரோ என்கின்ற ஐயத்தை இந்நிகழ்வு ஏற்படுத்துகிறது. அதற்காக, அதிகாரத்திடமிருந்து விலகி நிற்பது என்கிற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளமான கொள்கையில், அவர் சமரசம் செய்து கொண்டாரோ என்கிற வினாவும் உடன் எழுகிறது” என்றும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். தலைமை நீதியரசரின் செயல்பாடுகள் மீது, பெருமதிப்புக் கொண்டிருந்தோரிடையேயும்கூட இந்த நிகழ்வு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது அவர்களது சமூக வலைதளப் பதிவுகளில் வெளிப்படுவதைக் காண முடிகிறது.

ஆனால், சந்திர சூட் பற்றிய சித்திரம் கலங்கலானது. அயோத்தியின் சர்ச்சைக்குரிய நிலத்தில், இந்துக்கள் இராமர் கோவில் கட்ட அனுமதி அளித்தது ஐந்து நடுவர் கொண்ட அமர்வு. அவ்வமர்வில் இவர் ஓர் உறுப்பினர் என்பது நாடறிந்தது. பாபர் மசூதி வழக்கின் தீர்ப்பை எவர் எழுதினார் என்பது இன்றுவரை எவருக்கும் தெரியாது. ஆனால், அத்தீர்ப்பை இவரே எழுதினார் என்று பலரும் நம்புகின்றனர்.



ஆதார், பீமா கோரேகான் வழக்குகளில் அரசுக்கு ஆதரவான தீர்ப்புகளையும் இவர் எழுதினார். அதே நேரம், கடந்த காலங்களில், பல வழக்குகளில், ஒன்றிய பாஜக அரசுக்கு எதிரான தீர்ப்புகள் வழங்கிய அமர்வுகளில், இவரும் ஒருவராக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மார்ச்சில் வெளியான தேர்தல் பத்திர வழக்கின் தீர்ப்பு, ஓர் இன்றியமையாத எடுத்துக்காட்டு. வாக்காளர்களின் தகவல் பெறும் உரிமையை மறுப்பதால், தேர்தல் பத்திரங்கள் சட்டத்திற்கு எதிரானவை என்று இவர் தீர்ப்பளித்தார். ஆனால், தேர்தல் பத்திரங்கள் வாங்கியதில் இருந்த கொடுக்கல் - வாங்கல் குறித்து, நீதிமன்ற மேற்பார்வையில் ஒரு விசாரணைக்கான கோரிக்கை வைக்கப்பட்டபோது, இரண்டு நீதிபதிகள் குழுவின் தலைவராக இருந்த இவர் அதை நிராகரித்தார்.

ஆனாலும், ஒன்றிய பாஜக அரசுக்கு மாறுபட்ட கருத்துகளுக்கு ஆதரவான தீர்ப்புகளையும் பார்வைகளையும் சந்திர சூட் அவ்வப்போது முன்வைத்துள்ளார் என்பதால் அத்தகைய கருத்துகளைக் கொண்டிருந்தோரிடையே இவர் நெருக்கமானவராகப் பார்க்கப்பட்டார். முன்பிருந்த நீதியரசர்களிலிருந்து மாறுபட்டவராக, கருத்து சுதந்திரத்திற்கு ஆதரவானவராக, ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பவராக, சமத்துவத்திற்கு இணக்கமானவராகவும் இவர் பார்க்கப் பட்டார்.

இந்நிலையில்தான், சிறந்ததாகக் கருதப்பட்டுவந்த இவரது இந்த நீதித்துறைப் பயணத்தில், விநாயகர் சதுர்த்தி மோடியின் வருகை ஒரு சந்தேக நிழலை உருவாக்கியுள்ளது. பொது அமைப்புகளில் நன்கு அறியப்பட்ட மூத்த வழக்கறிஞரான இந்திரா ஜெய்சிங், தனது சமூக வலைப்பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார். “அரசு நிர்வாகத்திற்கும் நீதித்துறைக்கும் இடையில் இருக்கவேண்டிய அதிகார விலகலை, உச்சநீதிமன்ற நீதிபதி சமரசம் செய்து கொண்டுவிட்டார். இவர் மீது இருந்த எல்லா நம்பிக்கைகளையும் இது இழக்கச் செய்துவிட்டது. இவரது செயலை உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் அமைப்பு (SCBA) கண்டிக்க வேண்டும்.”

நீதியரசர் சந்திர சூட்டின் நடத்தையை, கடந்த காலத்தில் நீதிபதியாக இருந்த பி.என். பகவதியின் நடத்தையுடன் சிலர் ஒப்பிடுகின்றனர். 1980ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த பகவதி, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியைப் புகழ்ந்து, 1200 சொற்களில் ஒரு வாழ்த்துக் கடிதத்தை எழுதினார். தனிப்பட்ட முறையில் இக்கடிதம் எழுதப்பட்டிருந்தாலும், பின்னர் ஊடகங்களுக்குக் கசிய விடப்பட்டது. பகவதியுடன் பணியாற்றிய நீதியரசர் வீ.டி. துல்சாபுர்க்கர் பகவதியின் இக்கடிதத்தை, அவரது பெயரைக் குறிப்பிடாமல் விமர்சித்தார். “அரசியல் தலைவர்களின் வெற்றிகளை, நீதியரசர்கள் வானளாவப் புகழ்ந்து கடிதங்கள் எழுதுவதோ அல்லது மலர்க்கொத்துகள் அனுப்புவதோ, நீதித்துறையின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்த்துவிடும்” என்று அவர் பேசினார்.

இதற்கு முன்பு, பம்பாய் உயர் நீதிமன்றத்தில், 1953ஆம் ஆண்டு, நீதியரசராய்ப் பணியாற்றிய எம்.சி. சாக்லா, அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேருவைப் புகழ்ந்து எழுதினார். இந்தியாவுக்குப் பன்னாட்டுத் தரத்தை நேரு அளித்தார் என்றும், இராஜதந்திரத்தில் சிறந்த மேல்நாடுகள் அதைக்கண்டு பொறாமைப்பட்டன என்றும் அவர் எழுதினார். அதன் பலனாகத்தான், நீதியரசர் சாக்லா, இந்தியாவின் அமெரிக்கத் தூதராக, 1958 முதல் 1961வரை பணியமர்த்தப்பட்டார் என்றும் அவர், ஏப்ரல் 1962 முதல் செப்ரெம்பர் 1963வரை, பிரித்தானியாவின் இந்தியத் தூதரக உயர் ஆணையராகப் பணி வழங்கப்பட்டார் என்றும் 1963 முதல் 1966வரை ஒன்றியக் கல்வி அமைச்சராகவும், நவம்பர் 1966 முதல் செப்ரெம்பர் 1967 வரை வெளியுறவுத்துறை அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டார் என்றும் விமர்சனங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்படி அரசு அதிகாரத்துடன் நீதியரசர்கள் வெளிப்படையாக நெருக்கமாக இருப்பது ஒன்று, இரண்டாக அவ்வப்போது நிகழ்ந்து வந்தது. 2014ஆம் ஆண்டு, இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு, அதிகரித்தது. 2018ஆம் ஆண்டு, மேகாலயா நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த சுதீப் ரஞ்சன் சென், “இந்தியா இன்னுமொரு இஸ்லாமிய நாடாக மாறுவதை, நாட்டு நலன் கருதி மோடி அரசு தடுத்தது” என்று ஒரு தீர்ப்பில் எழுதினார்.

அதே ஆண்டு, பாட்னா உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து, பிறகு உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற, நீதிபதி எம்.ஆர். ஷா, மோடியைக் கதாநாயகன் என்றும், புகழ்பெற்ற, அன்புக்குரிய, துடிப்பான, தொலைநோக்கு உடைய தலைவர் என்றும் புகழ்ந்தார்.

பெப்ரவரி 2020இல், உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா, மோடியைச் சகலகலாவல்லவர் என்றும், உலக அளவில் சிந்தித்து, உள்ளூர் அளவில் செயலாற்றும் மேதை என்றும், உச்ச நீதிமன்றம் ஏற்பாடு செய்த பன்னாட்டு நீதி மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் புகழ்ந்துரைத்தார். அவர் பணி ஓய்வு பெற்றதும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூனில்தான் ஓய்வு பெற்றார்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சன் கோகாய், பொது மேடைகளில் எவ்விதத் தயக்கமும் இன்றி மோடியைப் புகழ்ந்து பேசினார். தனது பதவிக் காலத்தில், பல வழக்குகளில் அரசுக்கு ஆதரவான தீர்ப்புகளை அவர் வழங்கினார். ஓய்வு பெற்ற பிறகு மாநிலங்களவை உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டார்.

இந்நீதிபதிகள் வரிசையில் இப்போது சந்திரசூட்டும் இணைந்துள்ளார். பணி ஓய்வுக்குப் பிறகு முன்னவர்களைப் போல் இவரும் ஏதாவது அரச பதவியைப் பெறுவார் எனில், அது இந்திய நீதிமன்றங்கள் மீதான நம்பிக்கையை முற்றிலும் தகர்க்கும் என்பது சோகமானது.

# BASEMENT FOR RENT

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent.Sep. entrance & 1 parking. Close to all facilities. Avail. immediately.
**647.621.4309 / 437.882.0377**

**STAINES & STEELES**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & laundry. Rent $2,100 including utility. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.245.4221**

**BRIMLEY & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry & cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.201.6053**

**WARDEN & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to bus stop, Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.0657**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**TAIUNTON & BURKHOLDER PICKERING –** 2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 Parking. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.680.3167**

**BIRCHMOUNT & LAWRENCE**
3 Bedrooms & 2 washroom bsmt for rent. Sep. entrance & 3 Parking. Close to bus stop & all facilities Avail. immediately.
**437.233.4848/647.667.2762**

**VICTORIA PARK & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Ladies /Couple preferred. Avail. immediately.
**416.288.9575/647.762.9575**

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Couple preferred. Close to all facilities. Avail. immediately.
**905.294.9067 / 416.371.8419**

34 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

# BASEMENT FOR RENT

**TAUNTON & STEELES**
2 Bedrooms brand new walkout bsmt for rent. Sep. entrance, parking & Sep. laundry. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.7292**

**MORNINGSIDE & COLLINS**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to Centennial College. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.274.2390**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 701.6617**

**MARKHAM & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to all facilities. Avail. November 01, 2024.
**905.472.1370 / 647.500.4564**

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.8086**

**SEWELLS RD & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. 2 Working people /Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **: 647.701.3899**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Vegetarian family preferred. No Alcohol & smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.444.2024**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, & 1 parking. Infront of Iyappan Temple. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.720.5438**

மேலும் பக்கங்கள் 13, 14, 15

# BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.973.3879**

**MIDDLEFIELD & HIGHGLEN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. No pets & no smoking. Vegetarian family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.823.7576**

# ROOM FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**
Furnished rooms for rent. Single room $900 & sharing room (2 person) - $500 per person. (Including utility) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.312.1947**

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom for rent in an apartment. Internet. Single person preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.882.6939**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Close to bus stop (133, 39, 116, 53) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

**WHITES RD & TAUNTON**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Ladies only. Parking available. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.719.0951**

**14TH AVENUE & 9TH LINE**
1 Room for rent in a bsmt with attached washroom. Shared kitchen. Parking. Girls only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.1796**

# ROOM FOR RENT

**MIDLAND & LAWRENCE**
2 Bedrooms for rent in a house with attached washroom. Close to TTC & all facilities. Avail. immediately.
**647.763.8640/ 647.765.2743**

**MARKHAM & DENISON**
1 Bedroom for rent in a bsmt. 1 parking, free wifi & utilities included. Good for single male. Avail. November 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms for rent in a house. No parking. Students / working Male preferred. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.3256**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom available in a 3 bed room bsmt. Male only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in upstairs. parking & internet. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.576.1074**

**BRIMLEY & STEELES**
1 Bedroom available in a 2 bedrooms bsmt. Working / student Girl to share with another girl. Sep. entrance .Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms for rent in a main floor. Sharing kitchen & washroom. Working female/ couple preferred. Avail. November 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.542.4094**

**BRIMLEY & EGLINTON**
Room & Bachelor room with wash room & kitchen for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent in a house. Parking. Only for male. No smoking. Rent - $900. Avail. immediately.
**647.459.8050/647.877.7085**

**KENNEDY & EGLINTON**
1 Large room for rent in a 2 bed room Apartment. 2 People/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.540.9520**

## ROOM FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent in a luxury condo. (ground floor). Sep. washroom. Female preferred. Close to all facilities.Avail. immediately.
**647.760.3376 / 647.835.3376**

**NINTH LINE & BUR OAK**
1 Master bedroom with attached washroom for rent. 1 Parking. Female only. Avail. immediately.
**416.220.3416/905.201.8205**

**9TH LINE & 14TH AVENUE**
Rooms available for rent. Attached washroom, parking, laundry & internet. Close to YRT & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.648.1987**

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom for rent in 2 bedrooms bsmt. 1 Parking. Wifi included. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.721.2637**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Room on the main floor for rent with private washroom. No pets & No smoking & Female (Vegetarian) only. Senior preferred.
தொடர்புகளுக்கு: **647.512.2125**

**MORNINGSIDE & FINCH**
1 Sharing room for rent in a 3 bed room bsmt. Sep. entrance & Parking. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## BASEMENT FOR RENT

**WESTNEY & HWY 401**
2 Bedrooms walkout bsmt for rent. Sep. laundry & parking. Walking distance to TTC, School, park & church. Close to go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.236.7123**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, No parking, laundry. Close to all facilities. Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

## HOUSE FOR RENT

**MORRISH & ELLESMERE**
3 Bedrooms house for rent. 1 wash room, kitchen, living room, double garage & parking. Close to library, schools & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

**MEADOWVALE & ELLESMERE**
4 Bedrooms in upstairs & 2 bed rooms in bsmt full house for rent. 3 Min. walking distance to bus stop. & HWY 401. Avail. immediately.
**647.894.5585 / 647.997.7248**

**WHITBY NORTH**
3 Bedrooms house for rent. 3 wash rooms. 2 garage & 4parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**NINTH LINE & HWY 07**
4 Bedrooms & 2.5 washrooms full house for rent. 7 Parking. Close to hospital, Go Train, bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.674.4243**

**BURKHOLDER & TAUNTON**
**(Pickering)** 4 Bedrooms & 2 full washrooms house for rent. 2 Garage. Rooms available. Close to all facilities. Avail. immediately.
**647.678.0611/416.587.6564**

**WHITES RD & TAUNTON**
**(Pickering)** 4 Bedrooms & 2 full washrooms house for rent. Male only. Close to all facilities. Avail. immediately.
**647.504.9712/416.300.1796**

**WHITES RD & TAUNTON**
4 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

**BRIMLEY & FINCH**
3 Bedrooms house for rent. 2 Parking. Close to TTC & all facilities. Avail. October 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom house for rent. Couple /Small family preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## CONDO. FOR RENT

**WARDEN & HWY 07**
1 + Den Condo. for rent. 1 Parking. Close to HWY 407 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.989.3804**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & MULOCK (NEWMARKET)**
1 Bedroom Bsmt for rent in near South Lake hospital. Sep. entrance & parking Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.231.6620**

## BASEMENT FOR RENT

**WESTNEY & ROSSLAND (AJAX)**
Newly renovated 2 Big bed rooms bsmt for rent. Sep. en trance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.834.2794**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedrooms bsmt apt. for rent. Sep. entrance, parking. Very close to park, school & shopping mall. Small family/students preferred. Utilities 40%. Avail. immediately.
Please call or Text : **647.771.9852**

## BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & internet. Easy access to bus.Close to Sri Lankan/ Indian grocery store. Avail immediately.
**437.224.7385/647.823.9972**

## BASEMENT FOR RENT

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt apt. for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Avail. November 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.662.1418**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking & sep. laundry. Close to all super markets, library & school. Small family/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.4067**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.631.5745**

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. 24 hours TTC. Close to Nofrills, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**647.204.1520 / 416.732.0055**

## BASEMENT FOR RENT

**SHEPPARD & PORT UNION**
2 Bedrooms walkout bsmt for rent. 1 Parking. Close TTC, Metro, Banks & all facilities. Avail. November 01, 2024.
**416.206.5080 / 437.770.9268**

## BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms furnished bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to Warden subway, HWY 401 & 404. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.885.1225**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Sep. entrance, 2 parking. Close to School & Centennial College & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **416.275.2290**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & 1 parking. Close to TTC, Scar. town centre & all facilities. Ladies/ Small family preferred. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.649.9780**

## BASEMENT FOR RENT

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom bsmt with kitchen for rent for two people. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.3535**

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & ELLESMERE**
1.5 Bedroom, Sep. entrance, parking & laundry. Couple or small family preferred.
**BARRIE**
1 Bedroom, Sep. entrance, Parking & Laundry.
No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.8482**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units**
**647-861-8240**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
2 Bedrooms for rent in a apartment. Including utility. Close to all facilities.in front of Woodside mall. Working people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.566.0519**

## CONDO. FOR RENT
**WHITBY HARBOUR**
2 Bedrooms + Den & 2 washrooms Condo. for rent. Parking & Locker. 5 Min. walking distance to Go station. Close to HWY 401, 407 & Marina Lake. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.897.6121**

## வாகனப் போக்குவரத்து
விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்டதூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்: **416.880.5952**

## BASEMENT FOR RENT
**BROCK & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. Walking distance to bus stop, Go station, HWY 401 & shopping facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.894.8629**

## ROOM FOR RENT
**VICTORIA PARK & EGLINTON**
1 Bedrooms for rent in a 3 bedrooms Condo.. Shared kitchen & washroom. Gym & Laundry. Private/ 2 people can share. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.221.3770**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Room for rent in a 3 bedrooms bsmt. Shared kitchen. No par king. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.0566**

## HOUSE FOR RENT
**WARDEN & LAWRENCE**
6 Bedrooms house for rent. 3 Wash rooms & 2 Living rooms. 2 Families can share. Close to TTC, Shopping mall, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.854.5171**

## BASEMENT FOR RENT
**CASTLEMORE & ROY RAINEY (MARKHAM)** 2 Bedrooms + Den bsmt for rent. Sep. entrance, park ing & laundry. Close to all facilities. Couple/family preferred. No pet & no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.205.8317**

## ROOM FOR RENT
**MARKHAM & STEELES**
1 Bedroom for rent in a 2 Bedrooms legal bsmt. Female preferred. Close to Spiceland & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.529.2190**

## ROOM FOR RENT
**SCAR. GOLF CLUB & ELLESMERE**
1 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.764.5246**

## ROOM FOR RENT
**HARMONY & CONLIN**
**Oshawa North**இல் தனிவீடு ஒன்றின் மேல்தளத்தில் தனி **washroom**உடன் ஓர் அறை வாடகைக்கு உண்டு Student (woman)/வயோதிப தம்பதிகள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.916.5990**

## ROOM FOR RENT
**NEILSON & FINCH**
2 Bedrooms in Upstairs & 2 Bedrooms in a bsmt for rent. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.837.1860**

## ROOM FOR RENT
**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent. Parking available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

## HOUSE/BASEMENT FOR RENT
**WESTNEY & KINSTON (AJAX)**
3 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. parking available. Close to bus stop, HWY 401 & all facilities. Avail. immediately.
**416.821.2777/ 647.896.1239**

## ROOM FOR RENT
**MARKHAM & LAWRENCE**
Room for rent in a main floor. Sharing kitchen & washroom Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.721.0838**

## ROOM FOR RENT
**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Shared kitchen & washroom. Famale only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.451.1365**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent. All inclusive. Close to all facilities. Avail. immediately.
**416.522.3314/437.219.3329**

## HOUSE & BASEMENT FOR RENT
**SIMCOE ST. & TAUNTON**
**OSHAWA**
4 Bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Close to Bus stop & all facilities. Avail. immediately.
**647.717.3712 / 647.717.3702**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
2 Rooms available in main floor. Close to all facilities. Avail immediately.
**647.858.2290 /647.534.9897**

## ROOM FOR RENT
**CONLINS & SHEPPARD**
Rooms available for rent. Shared kitchen & wash room. 1 Parking available. Close to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms for rent in upstairs. Single preferred. In front of bus stop. Avail. immediately.
**647.231.2637/647.766.7089**

## BASEMENT & ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt with sep. entrance. Rent $1600 + 30% utility. 1Bedroom bsmt with sep. entrance. Rent $1300 + 30% utility. 1 Very large bedroom Rent $1400. 2 Male preferred. No alcohol, no pets & no smoking. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

## BASEMENT / ROOM FOR RENT
**MARKHAM & HWY 7**
4 Rooms with 2 full washrooms basement /Rooms for rent. Parking & Shared kitchen. $650 per room / $2,200 full basement. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.666.5051**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**BRIMLEY & LAWRENCE**
2/3 Bedrooms house for rent. 2 Min walk to bus stop & park. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.399.2416**

## HOUSE FOR RENT
**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail. October 2024.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## CONDO. SALE/RENT
**MCLEVIN & TAPSCOTT**
1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for Sale/rent. Good for Couple. Close to access the bus & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

## முதியோர் பராமரிப்பு
**MARKHAM & MCLEVIN**
பகுதியில் உள்ள Condo. town houseஇல் உள்ள அறையில் முதியோருக்கு உணவு மற்றும் பராமரிப்பு வசதிகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **437.254.7648**

## WHOLE SALE
**PILLOWS**
We import **pillows** with cover & extra sponge. You can buy whole sale & sell on your own.
**Minimum 25 pieces.**
**Pls. Call – 905.749.4848**
(Within 9:00 am - 2:00 pm)

## HOUSE FOR RENT
**NINTH LINE & HWY 07**
2 Bedrooms & 2 full washrooms town house for rent. 1 Parking. Close to hospital, bus stop (24x7) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.646.0110**

## HOUSE FOR RENT
**MIDLAND & MCNICOLL**
3 Bedrooms & 2 full washrooms newly renovated house for rent. (main floor ) 1 Parking & back yard. 5 min walking to school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.707.3794**

## HOUSE FOR RENT
**MCLEVIN & MALVERN ST.**
3 Bedrooms house for rent. 2 parking. Close to bus stop, shopping centre & Leon. Avail. immediately.
**647.898.6790 / 647.741.0469**

## ROOM IN COLOMBO
**GALLE RD – DEHIWALA**
Holiday rooms available for rent - Short term
Close to sea side.
தொடர்புகளுக்கு: **416.399.2416**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms & 2 full washrooms Town house for rent. (1800Sq.ft) 1 Parking. 1 Min walking to bus stop (24X7) & all amenities. Avail. November 01, 2024
தொடர்புகளுக்கு: **416.455.7961**

## HOUSE FOR RENT
**MEADOWVALE & LAWRENCE**
4 Bedrooms & 2.5 washrooms + 2 Garage full house for rent. Close to Go station, UTSC Campus. 1/2 family can share. Avail. immediately.
**416.704.3975 /416.721.3975**

## பெண் உதவியாளர் தேவை
வயோதிபப் பெண் ஒருவரை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை.
இடம் : **SCARBOROUGH**
தொடர்புகளுக்கு: **647.667.0482**

## AZ TRUCK DRIVERS
**AZ Truck Drivers Wanted**
**Location – USA**
**20 People needed immediately.** (2 Years experience in truck driving)
Contact: **416.771.8041**

## HOUSE FOR RENT
**BROCK & KINGSTON**
3 Bedrooms & 2 full washrooms house for rent. 1 powder washroom, 2 parking & laundry. Walking distance Pickering Town centre. Close to HWY401 & all shopping facilities. No Pets & no smoking. Avail. immediately.
**416.731.8542 / 416.301.4783/647.761.8542**

## குழந்தை பராமரிப்பு
**BRIMLEY & BRIMOTON** பகுதியில் உள்ள JKஇல் படிக்கும் 4 வயதுப் பிள்ளைக்கு பாடசாலை மதியநேர இடைவேளையின்போது (11.30Am-12.45Pm) உணவை ஊட்டவும் டயபர் மாத்தி விடவும் பெண் ஒருவர் தேவை. GTUBE Feeding இல் அனுபவமுள்ளவர்கள் அல்லது Registered Nurse விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.643.0637**

## HOUSE & ROOM FOR RENT
**OSHAWA** - 4 Bedrooms detached house for rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**PETERBOROUGH** - 4 Bedrooms & 2 washrooms detached house for rent.
**BEAVERTON** - 4 Bedrooms house for rent.
**WARDEN & FINCH** - 2 Rooms for rent in a Condo..
**STAYNER** - 5 Bedrooms house for rent.
தொடர்புகளுக்கு: **647.702.2159/ 647.706.5191**

## MANAGER, COOK & WAITRESS WANTED
**VICTORIAPARK & HWY 401 (Scarborough)**இல் அமைந்துள்ள **ENGLISH PUB**இற்கு **Experienced MANAGER, LINE COOK & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.**
**Please Contact : 416.566.9994**

## HOME MAINTENANCE
**உங்கள் வீட்டுத் தேவை எதுவாயினும் அழையுங்கள்**
- Basement
- Electric Work
- Plumbing work
- Painting
- Tile work
- Building Maintenance
- General Cleaning (Strip & Wax)
- Carpet, Shambo & Steam Cleaning
- Commercial, Industrial & Residential Cleaning.
- General Maintenance (Grass Cutting, Junk removal)
- Moving for residencial & Commercial (Local & Long distance)
- Airport Ride

போன்ற சகலவிதமான சேவைகளையும் உங்களுக்கு திருப்தியான முறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.
**416.333.5606 / 647.231.5606**

## JOB VACANCY
**OFFICE ADMINISTRATOR / RECRUITERS**
**LOCATION – SCARBOROUGH/BRAMPTON** (Full time / Part time)
**Requirement – University Degree in Canada with Institutional experience & excellent communication skills in English & Tamil**
If you're interested, please contact for more details.
**416.918.9848 /416.857.7603**

## HOME RENOVATION


- Home Painting
- Kitchen Counter top
- Kitchen cabinet
- Laminate
- Tile work
- Washroom Vanity
- Hardwood Flooring

உங்கள் நிர்மாண வேலைகள் எதுவாயினும் குறித்த நேரத்தில் அழையுங்கள் : **Krish – 647.642.7646**

Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

Available for Rent
Oshawa -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/month]
Pickering - Garrad / Rolling Acres - Basement (3Brm + 1 Bath + 1 Parking) [$2100/month]
Pickering - Mccowan / Eglinton- Basement ( 3 Brm + 1 Bath + Parking ) ($1750/month)
Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath + Parking ) Separate entry and laundry ( $2950/month)
Scarborough - Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/month)
Pickering - Brock/Rossland/Taunton Rd (1 BR 1 Bath ) ( $1650/month)

Available for Rent
Oshawa - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities)
Markham - Leslie and John- Full House (2Brm + 1Bath) + 2 Kitchen [$1850/month]
Scarborough - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)
Angus- Fifth Line & Center St - Detached (4Brm + 3 Bath) [$2999/month]
Whitby - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]
Mississauga-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$25000/month]

BUY / SELL/ LEASE / INVEST
- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.
கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999
We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# கனடாவில் மார்க்கம் விவசாயக் கண்காட்சி – 2024




குரு அரவிந்தன்

மார்க்கம் விளையாட்டரங்கில் கண்காட்சி ஒன்று ஒக்ரோபரில் இடம்பெற்றிருந்தது. கனடாவில் கோடை காலம் முடிந்து இலையுதிர் காலம் ஆரம்பமாகி இருக்கின்றது. அத்துடன் குளிரும் வந்துவிட்டது. மரங்கள் எல்லாம் நிறம் மாறி இலைகளை உதிர்க்கத் தொடங்கி விட்டன. இலை உதிர்க்குமுன் பச்சை, மஞ்சள், சிவப்பு, ஒரேன்ஞ் என்று பலவிதமாக மரங்களின் இலைகள் மாறி இருப்பதைப் பார்ப்பது மிக அழகாக இருக்கும். இயற்கையை ரசிப்பவர்களுக்கு இது ஒரு மாறுபட்ட காட்சியாகத் தெரியும். இங்கே உள்ள ஊசியிலை மரங்கள் பனிக்காலத்தில் இலை உதிர்ப்பதில்லை, அவை மாற்றமின்றி அப்படியே இருக்கும்.

வெளியரங்குகளில் நடக்கும் இது போன்ற நிகழ்வுகள் இனி பனிக்காலம் முடியும் வரை அனேகமாக நடைபெற மாட்டாது. மீண்டும் ஏப்ரல் மாதத்தில்த்தான் வெளி யரங்கு நிகழ்ச்சிகள் நடைபெறும். சிறுவர் களுக்கான உள்ளக அரங்குகள் பல இருந்தன. விவசாயத்தை முதன்மைப் படுத்தி, அது சார்ந்த காட்சிப் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இங்குள்ள இளைய தலைமுறையினர் விவசாயம்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால், அவர்களுக்கு ஏற்றது போல காட்சிகள் அமைந்திருந்தன. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகளையும், மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களையும் காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்திருந் தனர். குறிப்பாக மேப்பிள் மரத்திலிருந்து பெறும் மேப்பிள் பாணியைப் பலரும் வரிசையில் நின்று வாங்கினர். நன்றி




சொல்லும் நாள், கலோவீன் தினம் போன்றவை வருவதால் பூசணிக்காயும் விற்பனையாகியது.

ஒரு கிராமத்து விவசாயிக்கு எப்படித் தண்ணீர் கிடைக்கிறது, எப்படிப் பயிர் செய்கின்றனர், அவர்களின் வளர்ப்புப் பிராணிகள் எவை என்பன போன்றவற்றைப் பார்க்க முடிந்தது. மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, குதிரைப் பண்ணை போன்றவற்றை வைத்திருப்போர்களும் அவற்றைக் காட்சிப்படுத்தி இருந்தனர். மாடு, ஆடு, குதிரை, பன்றி, கோழிவகை கள், வாத்துக்கள், முயல்கள், நாய்கள் என்று அவற்றை அருகே சென்று குழந்தைகள் தொட்டுப் பார்க்கவும் வசதிகள் செய்திருந்தனர். சோளம் பயிர்



செய்யும் முறைகளையும், சோளத்தில் இருந்து பெறப்படும் உப உணவு வகை களையும் செய்து காட்டினர். அதேபோல பசு மாடுகளிலிருந்து பால் கறப்பது, அதன் உப உணவுகள் போன்றவற்றை எப்படிப் பெறுவது போன்ற முறைகளைச் செய்து காட்டினர்.

பழைய காலத்து விவசாய முறைகளை மட்டுமல்ல, விவசாயத்திற்குப் பாவிக்கப் படும் நவீன இயந்திர வகைகளையும் ஒரு பகுதியில் காட்சிப்படுத்தி இருந்தனர்.

வளர்ப்புப் பிராணிகளான நாய்களின் விளையாட்டுக் காட்சிகளும் ஓரிடத்தில் இடம்பெற்றிருந்தது. பிள்ளைகள் ஆர்வத் தோடு அதைப் பார்த்து ரசித்தனர். சிறுவர்களுக்கான விளையாட்டு அரங்கு களும், இதைவிட சிற்றுண்டி, உணவுச் சாலைகளும் நிறையவே இருந்தன. எங்களுடன் வந்த சிறுவர்கள் அங்கே



நின்ற விவசாயிகளிடம் சில கேள்வி களைக் கேட்டனர். அது என்னையும் சிந்திக்க வைத்தது.

ஏன் சில மிருகங்கள் புல், இலை போன்ற தாவரங்களையும், சில மிருகங்கள் மாமிசத் தையும் உணவாகக் கொள்கின்றன? அவற்றை எப்படி அடையாளம் காண்பது? ஏன் சில மிருகங்களின் கண்கள் எங்களைப்போல முன்பக்கம் இல்லாமல், பக்கங்களில் இருக்கின்றன? ஏன் மிருகங்களுக்கு வால் இருக்கின்றது?

# ரகு தாத்தா – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

கீர்த்தி சுரேஷின் நடிப்பில் இவ்வருடம் ஓகஸ்றில் வெளியான படம் இது. இப்படத்தில் கீர்த்தி பிரதம கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்திரா காந்தி இந்தியப் பிரதமராக இருந்த காலத்தில் கயல்விழி (கீர்த்தி சுரேஷ்) ஒரு வங்கியில் வேலை செய்து வருகிறார். வீட்டில் அவர் தனது அண்ணன், பெற்றோர் மற்றும் தாத்தாவுடன் வாழ்ந்து வருகிறார். பொழுதுபோக்கிற்காக கயல்விழி தனது தந்தையின் பெயரான 'பாண்டியன்' என்ற பெயரைப் பாவித்து 'க. பாண்டியன்' என்ற பெயரில் தமிழ் இதழ் ஒன்றிற்காக எழுதி வருகிறார். இதனால் அவர் ஒரு பெண் என்று வாசகர்களுக்குத் தெரியாது.

தமிழ்ப் பற்றுடைய கயலுக்கு வங்கியில் பதவி உயர்வு இந்தி பரீட்சை எடுத்தால் தான் கிடைக்கும் என்பதால் அவர் பதவி உயர்வை மறுக்கிறார்.

இவ்வாறு கதைகள்மூலம் பெண்ணியமும், செயல்மூலம் தமிழ்ப் பற்றையும் காட்டும் கயலின் தாத்தாவிற்கு நோய் வரும்போது, இதுவரை திருமணம் வேண்டாம் என்ற கயலை திருமணம் செய்ய வற்புறுத்துகின்றனர். கயல் திருமணம் செய்வாரா? இல்லையா? தனது கொள்கைகளைக் கைவிடாமல் இருப்பாரா? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.




பெண்ணியத்தை முக்கியமாகக் காட்டும் இப்படத்தில், பல பெண் பெயர்களுடைய கதாபாத்திரங்களாக இருக்கின்றனர். இப்படம் வழமையான, முதியவரின் உடல்நலத்தைச் சாட்டி, கதாநாயகியை திருமணம் செய்ய வற்புறுத்தும் கதை என்றாலும், இது ஓரளவு புதுமையுடன் இருக்கிறது.


நகைச்சுவைப் படம் என்றாலும் கதாபாத்திரங்கள் முக்கிய காட்சிகளில் நகைச்சுவையில்லாமல் சாதாரணமாக நடிப்பதால படம் இயற்கையாகச் செல்கிறது. அத்தோடு அனைத்து முக்கிய கதாபாத்திரங்களுக்குப் பெயரும் ஓரளவு விரிவுடன் காட்டப்படுவது இப்படத்தின் சிறப்பாகும். குறிப்பாக, கயலுடன் வங்கியில் பணிபுரியும் பெண் கதாபாத்திரம் விரிவாகப் படத்தில் காட்டப்படுகிறது.

ஆனால், படத்தின் பெயர் தாத்தாவின் உடையதாக இருந்தாலும், அவர் கயலின் தமிழ்ப்பற்றுப் போராட்டத்தை ஆதரித்தாலும், பார்வையாளர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு அவருக்கு முக்கியத்துவம் இல்லை. அனுபவமுள்ள நடிகர் என்றாலும், அவரது கதாபாத்திரம் கயலின் திருமணத்தைத் தூண்ட மட்டுமே பாவிக்கப்படுகிறது.

இச்சூழலில் கயல் அறிவுடன் செயல்பட்டு முன்னேறுகிறார். வழமையான படங்கள் போல கதாநாயகியின் கவனக் குறைவு, அரைகுறைவான விளக்கம், தவறான தகவல் போன்றவற்றால் அவருக்குப் பிரச்சினைகள் வரவில்லை. மாறாக சூழ்நிலைகளும், வில்லனின் சூழ்ச்சியாலும், பிறர் அவர்மீது கொண்ட மதிப்பினாலும்தான் கயலுக்குச் சிக்கல் ஏற்படுகிறது.

நகைச்சுவையும் கயலின் செயல்களால் ஏற்படவில்லை. எனவே, படம் இலகுவாகவும், கதை ஏற்கக்கூடியதாகவும், கயல் மேல் வெறுப்பு உண்டாக்காமலும் படம் செல்கிறது. அத்தோடு அவருடன் வேலை செய்பவர், புதிய உறவுகள் (பெண்கள்) கயலுக்கு இயல்பாக உதவுவதும் சிறப்பாக உள்ளது.

பெண்களோடு, ஆண்களும் உதவுகின்றனர். இப்படம் பெண்ணுரிமை பற்றிப் பேசும் பிற படங்களைப்போல வன்முறை, நீண்ட விளக்க உரைகள், சோகமான



காட்சி அல்லது பொருத்தமற்ற காட்சிகள் இல்லாமல் இருக்கிறது. இதனால், படம் இலகுவாகவும், தெளிவாகவும் விளங்கக் கூடியதாகவும் இருக்கிறது. அத்தோடு இப்படத்தின் வில்லன்போல இன்றும் பலர் உள்ளனர் என்பதால் அதற்கேற்ப நாம் செயல்பட வேண்டும் என இப்படம் உணர்த்துகிறது.

தமிழ் உரிமை, பெண்ணுரிமை பற்றிய கொள்கைகளையுடைய கதாநாயகியின் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

# சர்வதேச வாகனமோட்டும் சாரதி அனுமதி பத்திரம் கனடாவில் பெறுவது எப்படி?




சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

## International Driver's License

கனடாவிலிருந்து ஏனைய நாடுகளுக்குப் பிரயாணம் செய்வோர் தாங்கள் செல்லும் நாடுகளில் சுயமாக வாகனம் செலுத்த வேண்டும் என விரும்பினால் கனடாவில் இருந்து சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் (International Driver's Permit) எப்படிப் பெறுவது? அது மிகச் சுலபமானது.

சர்வதேச அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரத்தினை, கனடிய மத்திய அரசு, CAA (Canadian Automobile Association) என்று சொல்லப்படும் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

நீங்கள் வாழும் நகரில் உள்ள CAA அலுவலகத்துக்கு நேரில் சென்றால் உடனடியாகவே பெற்றுக்கொண்டு வரலாம். 1-800-267-8713 என்ற தொலைபேசிக்கு அழையுங்கள். உங்கள் நகரில் CAA அலுவலகம் எங்கு உள்ளது என்ற தகவல்களைத் தந்து உதவுவர். அதற்கு CAA அங்கத்தவராகத்தான் இருக்க வேண்டும் என்றல்ல. வலிமையான சாரதி அனுமதிப் பத்திரம் இருந்தால் போதும். ஒரு பக்க விண்ணப்பப்படிவத்தினை மட்டும்




நிரப்பி வழங்கி, பாஸ்போர்ட் அளவில் உள்ள இரு படங்கள் சமர்ப்பிக்க வேண்டும். அவர்களுக்குரிய கட்டணமாக $30 செலுத்த வேண்டும். சுமார் ஒரு மணித்தியாலத்தினுள் கையில் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தினைத் தருவர். ஒரு வருடத்துக்கு இது செல்லுபடியாகும். ஒரு வருடம் காலாவதியான பின்பு அதனைப் புதுப்பிக்கலாம். அந்நிய நாடுகளில் கனடிய சாரதி அனுமதிப்பத்திரத்துடன், இச்சர்வதேச வாகனம் செலுத்தும் அனுமதிப் பத்திரத்தினையும் வைத்துக் கொண்டு தாராளமாக வாகனம் செலுத்தலாம்.

இணையதளம்மூலம் ஒரு பக்க விண்ணப்பப் படிவத்தினைப் பிரதி எடுத்து, தபால் மூலமும் இலகுவாக அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்களின் கனடிய சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதி, இரு பாஸ்போர்ட் அளவு படங்கள் மற்றும் $30 கட்டணத்துக்குரிய உறுதிப்படுத்தப் பட்ட காசோலை (Certified cheque or money order), ஆகியவற்றுடன் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பும்போது, கிடைத்து இரு வர்த்தக நாட்களுக்கிடையில் (within two business days) தபாலில் அனுப்பி வைப்பர்.

தொடர்ந்து ஒரு வருடத்துக்கு சர்வதேசம் எங்கும் சுயமாக வாகனம் செலுத்தும் அனுமதியினை நீங்களும் பெறலாம்.

நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE *SINCE 1996*
* திருமணத்திற்கான தாலிக்கொடி, மற்றும் அனைத்து நகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
* தங்கநகை அடகுச் சேவை.
* பழைய தங்கநகைகள் விற்பனை
CASH FOR GOLD
மேலதிக விபரங்களுக்கு
647.702.2159
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# துப்பாக்கிக் கலாசாரம் பாடசாலை மாணவர்களின் நடத்தைகளைப் பாதிக்கின்றதா?



**T. சிவபாலு**

கனடாவில் உள்ள பொலிஸ் சேவைகள் 2022ஆம் ஆண்டில் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களாக 14,000 சம்பவங்களைப் பதிவு செய்துள்ளன. இது முந்தைய ஆண்டைவிட அண்ணளவாக 1,400 அதிகமானதாகும். 2022இல், துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் விகிதம் 100,000 மக்கள் தொகைக்கு 36.7 சம்பவங்கள். இது 2021இல் இருந்த 100,000 மக்கள் தொகைக்கு 33.7 சம்பவங்களுடன் ஒப்பிடும்போது 8.9% அதிகரிப்பாகும். ஒப்பிடக்கூடிய தரவு முதன்முதலில் 2009இல் சேகரிக்கப்பட்டதிலிருந்து இது அதிகபட்ச விகிதமாகும்.

2021முதல் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகரிப்பு ஒன்ராறியோவில் 1,016 சம்பவங்கள், (24% அதிகரிப்பு), நியூபிறவுன்ஸ்விக்கில் 64 சம்பவங்கள், (24% அதிகரிப்பு) மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் 194 சம்பவங்கள், (12% அதிகரிப்பு)ஆகக் காட்டுகின்றது.

கனடாவின் மிகப்பெரிய பெருநகரப் பகுதியான ரொறொன்ரோவில், துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் வீதம் (4.7%) குடித்தொகைக் கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது இரண்டாவது இடத்தில் உள்ளதைக் காட்டுகின்றது. அதன் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் விகிதம் 100,000 மக்கள் தொகைக்கு 43.2 சம்பவங்கள். இது 2021இல் இருந்ததைவிட 36%த்தாலும் 2013இல் இருந்ததைவிட 93%த்தாலும் அதிகரித்துள்ளது.

கனடாவின் மற்ற இரண்டு பெரிய குடித்தொகைக் கணக்கெடுப்பு (CMA)களும் 2022இல் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் வீதம் அதிகரித்ததைக் காட்டுகிறது. மொன்றியலில், 2013முதல் 2020வரை 12% அதிகரிப்பைத் தொடர்ந்து, 2021இல் 100,000 மக்கள் தொகைக்கு 28.0 சம்பவங்களாக (0.4%) அதிகரித்துள்ளது. வன்கூவரில், 2022இல் துப்பாக்கி தொடர்பான வன்முறைகள் 100,000 மக்கள் தொகைக்கு 23.6 சம்பவங்கள். இது 2021இலிருந்து 24%த்தால் அதிகரித்துள்ளது. 2009 முதல் 2013வரை, கனடாவில் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் ஒப்பீட்டளவில் 30% குறைந்துள்ளது. 100,000 மக்கள் தொகைக்கு 33.9 சம்பவங்களில் இருந்து 23.7 சம்பவங்களாகக் குறைந்துள்ளன.

வன்முறைக் குற்றம் மற்றும் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் 2013முதல் அதிகரித்துள்ளன. ஆனால் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகரிப்பு பெரிதாக இருக்கிறது. 24%த்திலிருந்து 55%ஆக அதிகரித்துள்ளது. பொதுவாக வன்முறைக் குற்றங்கள் அதிகரித்து வருவதால், துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் வீதமும் அதிகரிக்கின்றது. வன்முறைக் குற்றங்கள் 2013இல் 2.2%ஆக இருந்தது. 2022இல் 2.8%ஆக அதிகரித்துள்ளது.



துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகரிப்பு கிட்டத்தட்ட அனைத்து வன்முறைக் குற்றங்களுக்கும் காணப்படுகிறது. கடந்த சில வருடங்களாக, துப்பாக்கி சம்பந்தப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், குறைந்துவரும் சில குற்றங்களில் கொள்ளையும் ஒன்றாகும். இருப்பினும், துப்பாக்கி சம்பந்தப்பட்ட கொள்ளை 2022இல் அதிகரித்துள்ளது. 2021இல் 100,000 மக்கள் தொகைக்கு 7.9 சம்பவங்களிலிருந்து 2022இல் 9.8ஆக உயர்ந்துள்ளது.

துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் வீதம் பெரும்பாலும் துப்பாக்கி பிரயோகமான வன்முறைக் குற்றங்களால் மேல்நோக்கிச் சென்றுள்ளது. உள்நோக்கத்துடன் துப்பாக்கியை வெளியே எடுத்தல், குற்றச் செயல்களில் துப்பாக்கியைப் பயன்படுத்துதல், துப்பாக்கியை சுட்டிக்காட்டுதல் 2013முதல் இருமடங்காக அதிகரித்துள்ளது. 2022இல் 100,000 மக்கள் தொகைக்கு 12.2 சம்பவங்கள் நடந்துள்ளன. 2013இல் குறைந்த அளவில் இருந்த துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் அனைத்து மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் அதிகரித்துள்ளன. வடமேற்குப் பிரதேசங்களில் 303%, சஸ்கச்சுவான் 165%, யூகோனில் 149% மற்றும் நியூபிறவுன்ஸ்விக்கில் 126%மாக மிகப் பெரிய அதிகரிப்புகள் பதிவாகியுள்ளன.

2022இல் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் சஸ்கச்சுவானில் 100,000 மக்கள் தொகைக்கு 109.6 சம்பவங்களாக இருந்தன. இதுவே கனடிய மாகாணங்களில் அதிகபட்சம். அதேநேரத்தில் பிரின்ஸ் எட்வர்ட் தீவு மிகக் குறைந்த அளவைப் பதிவு செய்துள்ளது. அங்கு 100,000 மக்கள் தொகைக்கு 10.0 சம்பவங்கள் நடந்தன.

2022ஆம் ஆண்டில், ரெஜினா நகரில் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் 100,000 மக்கள் தொகைக்கு 83.0 சம்பவங்களாக இருந்தன. இது வன்முறைக் குற்றங்களில் 7.0% ஆகும். ரெஜினா நகர் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகபட்ச சதவீதத்தைப் பதிவு செய்தது.

2013முதல் 2022வரை துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகரிப்பு குறிப்பாக பிராந்தியங்களில் 139%ஆகவும் மாகாணத்தின் வடக்குக் கிராமப் புறங்களில் 141%ஆகவும் இருந்தன. தென் மாகாணத்தில் உள்ள நகர்ப்புறங்களில், இந்தக் காலகட்டத்தில் இவ் அதிகரிப்பு 45% உயர்ந்துள்ளது.

2013ஆம் ஆண்டிலிருந்து துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களின் அதிகரிப்பு அனைத்து வகையான துப்பாக்கிகளுக்கும் காணப்படுகிறது. எவ்வாறாயினும், கைத் துப்பாக்கிகள் 50%மும் 'துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் அல்லது அறியப்படாத வகை துப்பாக்கிகள்' 76%மும் அதிகரித்துள்ளன.

2022ஆம் ஆண்டில், வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டோரில் 1.7% பேர் துப்பாக்கியால் காயமடைந்துள்ளனர். இருப்பினும், காயத்தின் அளவைப் பொறுத்து இது மாறுபடும். ஒரு துப்பாக்கி 1.0% சிறு காயங்களையும், 8.6% பெரிய காயங்கள் மற்றும் 40% அபாயகரமான காயங்களையும் ஏற்படுத்தியுள்ளன.


பொதுவாக வன்முறைக் குற்றங்களைப் போலல்லாமல், 2022இல் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டோரில் பெரும்பான்மையானோர் ஆண்கள் (66%). துப்பாக்கியால் காயமடைந்த 10 பேரில் 8 பேர் ஆண்கள் ஆவர்.

பொதுவாக வன்முறைக் குற்றங்களைப் போலவே, 2022இல் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டோரில் பெரும்பாலானோர் 89% ஆண்கள். இருப்பினும், குற்றம் சாட்டப்பட்ட பெண்களின் வீதம் கடந்த பத்து ஆண்டுகளில் வேகமாக உயர்ந்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டோரில் ஆண்கள் 26%மும் பெண்கள் 88%மும் உயர்ந்துள்ளது.

பொதுவாக வன்முறைக் குற்றங்களுடன் ஒப்பிடும்போது, துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்கள் ஒன்றுக்கு மேற்பட்டோரை குற்றம்சாட்டுவது 6.0%இலிருந்து 25%மாக உயர்ந்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்படுவது 10%இலிருந்து 22%மாக உயர்ந்துள்ளது.

2022இல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் அல்லது கும்பல் தொடர்பான குற்றங்கள் துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களில் 4.3% ஆகும். இது பொதுவாக வன்முறைக் குற்றங்களைவிட 0.3% அதிகமாக உள்ளது. இது துப்பாக்கி தொடர்பான வன்முறைக் குற்றங்களில் 9.4% ஆகும். இவை கனடிய சமூகத்தில் இடம்பெறுவதாக இருந்தாலும் பாடசாலைகளிலும் இவற்றின் தாக்கம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன. இன்று பாடசாலை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தப்படும் போதைப்பொருட்கள் பெருந்தொகையான துப்பாக்கி வன்முறைகளுக்குக் காரணிகளாக உள்ளன. இவற்றைக் குறைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் துப்பாக்கி களவாக அமெரிக்காவிலிருந்து கொண்டு வருதல், போதைப் பொருட்களின் பாவனை என்பன அவற்றின் விற்பனையோடு தொடர்புடைய பல்வேறு கொலைகளுக்கு வித்திட்டுள்ளது என்பது அப்பட்டமான உண்மை.

தொடர்ச்சியாக பாடசாலைகளில் இடம் பெறும் வன்முறைகளுக்கு என்ன காரணம்? இவற்றைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றிய ஆய்வுகளும் அவற்றிற்கான செயற்திட்டங்களும் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்று வருவதனைக் காணலாம். அமெரிக்கப் பாடசாலைகளில் மட்டுமல்ல கனடா உட்பட பல்வேறு நாடுகளிலும் பாடசாலைகளில் இடம்பெறும் வன்முறைகள் அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. இவற்றிற்கான அடிப்படை எங்கிருந்து தொடங்குகின்றது என்பது முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதே.

## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



## பலகாரத் தேவைகளுக்கு

ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு

அழையுங்கள்: 647.765.2250